
# அலை ஓசை

சமய-சமூக இலக்கிய சஞ்சிகை

ஆடி – புரட்டாதி 2017
ISSN 2313 -2547

இளையோர் சிறப்பிதழ்






" நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னை தாழ்வாகக் கருதாது இருக்கட்டும் "

I திமொ 4:12

50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை ஓசை

சமய-சமூக இலக்கிய சஞ்சிகை
அலை 02 ஓசை 03
[illegible] 2017

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

ஆசிரியர் குழு:
[illegible]
[illegible]
[illegible]

ஆலோசகர்:
அருட்தந்தை ஏ.ஏ. நவரெட்ணம்

கணனி எழுத்துருவாக்கம்:
சி.சாருஜன்

கணனி வடிவமைப்பு:
ச.பிரதீபா

வெளியீடு:
அலைஓசை கலைத் தொடர்பகம்
திருகோணமலை மறை மாவட்டம்

முகவரி:
அலைஓசை கலைத்தொடர்பகம்
இல.17, புனித அந்தோனியார் வீதி
திருகோணமலை
mail: trincoalaiosai@gmail.com

பதிப்பகம்:
றிங்கோ பிறின்டர்ஸ்
157, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை
0703555740 - 0262227868

**விலை ரூபா 50.00**
**ஆண்டுச் சந்தா - ரூபா 300.00**
**(தபாற்செலவு உட்பட)**

| | |
|---|---|
| ஆசிரியர் ஓசை | ..... 01 |
| உலகளாவிய இளைஞர் எழுச்சி | ..... 02 |
| பந்தாடப்படும் பட்டதாரிகள் | ..... 05 |
| கவிதைகள் | ..... 08 |
| கொடிய டெங்கு | ..... 09 |
| குறுங்கதை (பிறந்தநாள் பரிசு) | ..... 10 |
| அருட்தந்தையரை அறிவோமா | ..... 13 |
| சிறுகதை (திருப்பம்) | ..... 15 |
| மாற்றம் வேண்டும் ஏற்றம் கண்டிட | ..... 19 |
| அரசியல் அலசல் | ..... 21 |
| தம்பி உனக்குத்தான் | ..... 23 |
| கவிதைகள் | ..... 25 |
| சமூகத்தில் இளைஞரின் பங்கு | ..... 26 |
| மறைமாவட்ட செய்திகள் | ..... 27 |
| திருஅவைச் செய்திகள் | ..... 28 |
| இறையியல் பயணம் | ..... 29 |
| இலக்கிய ஓசை | ..... 31 |
| முதலுதவி..... | ..... 33 |

ஆக்கங்களுக்குப் பொறுப்பு படைப்பாளிகளே - ஆசிரியர்

ALAI OSAI CULTURAL CENTRE
NO.17, ST ANTONY STREET,
TRINCOMALEE.
026 222 0071

**கல்விச்சிறப்பிதழாக வெளிவரவிருக்கும் அடுத்த அலை ஓசை இதழுக்கு ஆக்கங்களை 2017 புரட்டாதி 15ற்கு முன் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியர் ஓசை

### "இளைஞர்களே நீங்கள் இல்லாமல் திருச்சபை என்ன ஆகும்"

என்று இளையோரின் நண்பர் என வர்ணிக்கப்படும் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் தெரிவிக்கிறார்.

திருத்தந்தையின் கூற்றுக்கமைய திருச்சபையையோ, கிராமத்தையோ, நாட்டையோ, ஏன் உலகையோ கட்டி எழுப்ப வேண்டுமென்றால் இளையோரின் பாரிய பங்களிப்பு அவசியமானது.

திருத்தந்தையின் கூற்றுக்கு வரைவிலக்கணம் சேர்த்தாற் போல் "துடிப்பும் ஆர்வமும் உள்ள பத்து இளைஞர்களை என்னிடம் தாருங்கள் இந்த உலகை மாற்றிகாட்டுகிறேன்" என்னும் சுவாமி விவேகானந்தரது கூற்றும் அமைந்துள்ளது.

இளையோர் சிறப்பிதழாக மலரும் இவ் அலைஓசை இளையோரின் சிறப்பம்சங்களையும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் அதே வேளையில் இன்றைய இளையோருக்கு இருக்க வேண்டிய சாதிக்கும் வெறி, துடிப்பாற்றல், நேர்மறைச் சிந்தனைகள், ஒன்று சேர்ந்த உழைப்பு, பெரியோரை கனம் பண்ணுதல் போன்ற பல்வேறு விழுமியங்களைப் பற்றியும் செவ்வனே தாங்கி நிற்கின்றாள். தகுந்த ஆக்கங்களை நல்கியவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

குழந்தைகளுக்கு எதிர்காலம் மட்டுமே உண்டு, முதியோருக்கு இறந்தகாலம் மட்டுமே உண்டு, ஆனால் இளையோருக்கோ முக்காலமும் உண்டு. அந்த வகையில் பரந்து விரிந்து இருக்கும் இவ் உலகில் தற்காலத்தைப் பொறுத்தமட்டில் சந்தர்ப்பங்களும், சலுகைகளும் தாராளமாகவே இருக்கின்றன. ஆகவே இன்றைய இளையோர் உலகின் மாயக் கவர்ச்சிக்கு அடிபணிந்து விடாது தமது இளமைக் காலத்தினை கல்வி அறிவு ஊடாக விருத்தி செய்யவும், இணையத் தளங்களின் ஊடாக நுண் அறிவுகளையும் உலகளாவிய பரந்துபட்ட ஞானத்தினையும் வளர்த்துக்கொள்ள முனைய வேண்டுமே தவிர போதைப் பொருட்களுக்கு அடிமையாகியோ, சிற்றின்பத்துக்காக வெறி பிடித்து அலைந்தோ, வலைத் தளங்களைக் கொண்டு ஆபாச விடயங்களை பார்வையிட்டோ தமது பொன்னான நேரத்தையும் காலத்தையும் விரயம் செய்யாமலிருப்பதன் மூலமாக ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள முடியும்.

"ஏழு முறை விழுந்ததை நினைப்பதை விட எட்டாவது முறை எழுந்ததைக் கண்டு மகிழ்ச்சிகொள்" என்கிறது ஜப்பானிய பழமொழி. இளையோர் தங்களது சாதிக்கும் மனப்பான்மையில் ஒரு போதும் தளர்ச்சி அடைந்து விடக்கூடாது. முயற்சியே திருவினையாகும். உடலின் உறுதியைப் போன்று மனத்திடமும் இளையோருக்கு அவசியம். ஏனெனில் தடைகளும், சவால்களும், ஏமாற்றங்களும் எல்லோர் வாழ்விலும் சர்வ சாதாரணமானவை. ஆகவே விரக்தி அடைந்து விடக்கூடாது.

இளமைக்கு வேகம் அவசியம், ஆர்வம் அவசியம், கோபம் அவசியம், தீவிரம் அவசியம், கொள்கை அவசியம், புதுமை படைத்தல் அவசியம்; ஆகையால் இந்தப் பண்புகள் எதுவும் அழிவுக்கோ, நாசகார வேலைகளுக்கோ இட்டுச் செல்லக்கூடாது மாறாக சமூகத்தைக் கட்டியெழுப்பவே பயன்பட வேண்டும். அத்தோடு இளையோர் தனித்தனியே உழைத்து சாதிக்க முனையும் போது மிக விரைவில் களைப்படைய வாய்ப்பிருக்கிறது. பலருடைய நல்ல பல புதிய கருத்துக்கள் கிடைக்காமல் போகலாம். இது சாதனைகளுக்கு பெரிய இழப்பாகவே கருத முடியும்.

"ஆண்டவர் பற்றிய அச்சமே ஞானத்தின் தொடக்கம் அவர் தம் கட்டளைகளைக் கடைபிடிப்போர் நல்லறிவுடையோர்; அவரது புகழ் என்றென்றும் நிலைத்துள்ளது" (தி.பா.111:10) இளையோரே நமக்கு கல்வித் தகமைகளும் பதவிப் பட்டங்களும் இருக்கலாம். ஆனால் கடவுள் பக்தியும் பயமும் இல்லை என்றால் நாம் தடம் புரண்டு விடுவோம். இதற்கு நல்ல உதாரணம் வட மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் ஐயா ஆவார்.

சி.வி.விக்னேஸ்வரன் எப்போது உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சிறுவர் பாலியல் துஷ்பிரயோக குற்றத்திற்காக தண்டனை வழங்கப்பட்ட இந்திய தமிழ் நாட்டை சேர்ந்த பிரேமானந்த சுவாமிகளுக்கு ஒப்பிட்டு கருத்து வெளியிட்டாரோ அன்றிலிருந்து அவருக்கு அழிவு ஆரம்பித்தது. புகழின் மமதையில் இருந்த சி.வி. விக்னேஸ்வரன் இளைப்பாறிய நீதிபதியாக இருக்கலாம் முதலமைச்சராகக் கூட இருக்கலாம்; உயிர் உள்ள வாழும் கடவுளை நிந்தித்தார். அந்தோ பரிதாபம்! எல்லா முனைகளில் இருந்தும் அவரது இருப்புக்கு ஆப்பு வைக்கப்படுகிறது. இப்போது அவரது நிலைமை ஆப்பிழுத்த குரங்கு தான்.

ஆகவே இளையோரே உங்களை சகல வழிகளிலும் வளர்த்து, கூட்டு முயற்சியோடு சமூகத்திற்காக கடவுள் பக்தியோடும் பயத்தோடும் சாதித்துக் காட்டுங்கள்.

உங்கள் நிகழ்காலம், எதிர்காலம் ஓகோ தான்.



-ஆசிரியர்-

**நீதி மொழிகள்:** உன் செயல்களை ஆண்டவரிடம் ஒப்படை அவற்றை வெற்றியுடன் நிறைவேற்றுவாய்.

நீ.மொ.16:3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய இளைஞர் எழுச்சி



- கி.வி. சுந்தரிமைந்தன் -

தமிழ்நாடு

20ம் நூற்றாண்டின் பிற்பாதிக்கும் மேல் தொடங்கி இன்று வரை நிகழும் இளைஞரின் எழுச்சி ஆங்காங்கே சுழற்றியடித்தும் சமூக மாற்றச் சூறாவளி என்றால் மிகையாகாது.

### 1960களில் அமெரிக்காவின் இளைஞர் எழுச்சி.

1930 களில் அமெரிக்காவில் கூட்டாட்சித் தத்துவம் வலுப்பெற்றது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் (1939 - 1945) உலகின் தலைமை நாடாகவும் சோவியத் ஒன்றியத்தின் எதிர்ப்பாளராகவும் அமெரிக்கா தலையெடுத்தது. 1950 - 1960களில் பொருளாதார மேம்பாடு ஏற்பட்டது. அதிகமான இளைஞர்கள் கல்லூரி படிப்பை மேற்கொண்டனர். கல்வியும் கல்விக்கூடங்களும் விழிப்புணர்வு தளங்களாயின.

நம் நாட்டு அமைப்பின் உள்ளார்ந்த நோக்கங்களும் அதற்கு மாறான தடம் புரண்ட செயற்பாட்டு நெறிகளும் மாணவர்களிடையே கேள்விகளை எழுப்பின. சமூக மாற்றத்திற்கான இயக்க உணர்வு மாணவர்களிடையே கொழுந்து விட்டெரிந்தது. குடியுரிமை அல்லது மானிட உரிமை எனும் பெயரில் போராடத் தொடங்கினர். “மாணவர்களின் வன்முறையற்ற ஒருங்கிணைப்புக் குழு” வலுப்பெற்றது.

கறுப்பினத்தவர்களுக்கெதிரான அடக்கு முறைக்கு இந்த வேறுபாட்டிற்கு எதிராக மாணவர்கள் போராடினர். அன்றைய காவல்துறை மாணவர்களுக்கெதிராக நாய்களை ஏவி கடிக்க வைத்தது. ஆனால் இறுதி வெற்றி மாணவர்களுக்கே! 1964 - 65 களில் இனவெறி ஒடுக்கு முறைக்கு எதிரான சட்டங்கள் இயற்றப்பட்டன.

### சீனாவில் தியான மென் சதுக்க போராட்டம்..

பொருளாதார வளர்ச்சி, தாராளமயமாக்கல், மேலைநாட்டு வாழ்க்கை முறைத்தாக்கம் வல்லரசுகளோடு போட்டி போடும் ஏற்றம் என்பன 80களில் சீனா முன்னேறியதும் அதே வேளையில் பணவீக்கம் விலைவாசி உயர்வு ஆட்சி அதிகாரத்தில் ஊழல் போன்ற சிக்கல்களும் வளர்ந்தன. 1980 களில் அறிவியலாளர்களும் படித்தவர்களும் அரசியலில் ஈடுபட அரசே தூண்டியது. 1986 இல் மாணவர்கள் தனிமனித உரிமை கருத்துரிமைக்காகப் போராடத் தொடங்கினர். 1987 இல் சீன கம்யூனிச தலைமை இதை ஒடுக்கப்பார்த்தது. அப்போது சீன கம்யூனிச பொது செயலாளராக இருந்த “ஹுயாவோ பாங்க்” என்பவரும் சனநாயக மறுமலர்ச்சிக்காகக் குரல் கொடுத்தார். புதிய எழுச்சிப் போராட்டங்களுக்கு அவரது கூற்றுக்களும் காரணமாகின என்பதால் அவரை பதவியிலிருந்து விலக்கினர்.

1989ல் ஹு இறந்த பின் ஏப்ரல் 22 இல் அவரின் அடக்க நாளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தியான மென் சதுக்கத்தில் ஒன்று கூடினர். சனநாயக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரிமைக்காகவும் அரசியல் மறுமலர்ச்சிக்காகவும் போராட்டம் தொடர்ந்தது. சீனாவின் பல நகரங்களிலும் போராட்டம் பரவியது. அரசு முதலில் மிரட்டிப்பார்த்தது. 1989 மே இறுதி வாரத்தில் பெய்ஜிங்கில் இராணுவக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இராணுவம் மாணவர்களை சூழ்ந்தது. ஜுன் 3 - 4 நாட்களில் இராணுவப்பீரங்கிகள் சதுக்கத்தில் குண்டு மழை பொழிந்தன. பீரங்கிகள் முன்னின்று மாணவர்கள் போராடினர். பலர் கொல்லப்பட்டனர். பல்லாயிரக் கணக்கானோர் சிறைபிடிக்கப்பட்டனர். அரசின் கணக்குப்படி 241 மாணவர்கள் கொல்லப்பட்டனர். 7000 மாணவர்கள் சிறைபிடிக்கப்பட்டனர்.

### அரேபிய நாடுகளில் எழுந்த உரிமை எழுச்சி...

இவ் எழுச்சியானது உலக இளைஞர்களை உசுப்பி விட்டது. அரேபிய இளைஞர்களும் மக்களும் தமது நாட்டின் ஆட்சியாளர்கள் ஏற்படுத்திய காலனி ஆதிக்கத்தை எதிர்த்தனர். இவ் எழுச்சியை நாசிம் நிக்கோலாஸ் தாலப் எனும் மெய்யியலாளர் "கறுப்பு வாத்து நிகழ்வு" என்கிறார். விளைவாக எகிப்து அரசு வீழ்ந்தது.

இது லிபியா வரை தொடர்ந்து அரசுகளை வீழ்த்தியது.

### தமிழகத்தின் தைப் புரட்சி....

தமிழ் நாட்டில் இந்தி போராட்டத்திற்குப் பிறகு மாணவர்கள் நடத்திய மாபெரும் போராட்டம் ஜல்லிக்கட்டு தடைக்கெதிராக நடைபெற்ற தைப்புரட்சி தான். தமிழர்களின் பண்பாட்டு அடையாளமான ஜல்லிக்கட்டு என்னும் வீரவிளையாட்டை தடை செய்ய நீதிமன்றத்தில் வழக்கு கொடுத்து தடையும் பெற்றது பீட்டா (PETA) என்ற அமைப்பு. இதனால் 2015, 2016 ம் ஆண்டுகளில் தை மாதத்தில் பொங்கல் திருநாளை ஒட்டி நடைபெறக்கூடிய ஜல்லிக்கட்டை தமிழகத்தில் நடத்த முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2017.01.17 அன்று காலை 10 மணியளவில் சென்னை மெரினா கடற்கரையில் இளைஞர்கள் குவிந்தனர். மதுரை, கோவை, திருச்சி, திருப்பூர், சேலம், வேலூர், திண்டுக்கல் என தமிழகம் முழுவதும் மாணவர்களும் இளைஞர்களும் போராட்டத்தில் குதித்தனர். 2000 பேருடன் தொடங்கிய போராட்டத்தில் அடுத்த நாளே இலட்சக் கணக்கானோர் பங்கேற்றனர்.

ஜல்லிக்கட்டுக்கான தடையை நீக்கக் கோரி நடந்த போராட்டங்கள் தீவிரமடைய அப்போதைய தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் 18ம் திகதி டெல்லி சென்றார் 20ம் திகதி ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான ஓர் அவசரசட்ட வரைபு மத்திய அரசின் ஒப்புதலுடன் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டது. 21ம் திகதி மாலை தமிழக ஆளுநர் அவசர சட்டத்தை பிறப்பித்தார். 23ம் திகதி தமிழக சட்ட மன்றத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான ஓர் அவசரசட்டம் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

பின்பு போராட்டம் வெவ்வேறு வடிவங்களுக்கு மாறிவிடுமோ என்ற அச்சத்தில் அரசு காவல்துறை மூலம் வன்முறையை ஏவியும் கைது செய்தும் போராட்டத்தைச் சீர்குலைத்தது. இருப்பினும் வெற்றி கண்டவர்கள் இளைஞர்களும் மாணவர்களுமே.

**இலங்கையில் தமிழீழத்திற்கான போராட்டம்**

தமிழர்களின் உரிமைக்காக தந்தை எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களால் உருவாக்கப்பட்ட அஹிம்சை போராட்டம் 1983ம் ஆண்டு ஏற்பட்ட தமிழினத்துக்கெதிரான வன்முறையின் பின்னர் தமிழீழத்திற்கான போராட்டமாக உருவெடுத்தது. திரு வே பிரபாகரன் அவர்களின் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைமையில் ஆயுதப் போராட்டமாக வடிவெடுத்தது.

30 வருட போராட்டம் தரைப்படை, கடற்படை வான்படை மற்றும் காவல்துறை என்ற கட்டமைப்புக்-களாக உருவெடுத்தது. இலங்கை அரசையே பல்லாண்டு காலம் திணறடித்து பல்லாயிரம் உயிர்களைக் காவுகொண்ட இளைஞர் போராட்டம் இந்தியா, சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளின் முனைப்பில் நசுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசும் பந்தாடப்படும் பட்டதாரிகளும்




எஸ். சிவகுமார்
தலைவர்,
திருமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

எமது நாட்டில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் 3 தசாப்த கால யுத்தத்தினை சந்தித்து மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இங்கு அடிப்படை வசதிகள் அற்றுப் போனாலும் மாணவர்கள் கல்வி-யினை ஒரு மூலதனமாக நம்பி பாடசாலைக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கல்வி பயின்று வருகின்றனர். வடகிழக்கில் உள்ள பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகத்திற்குள் நுழையும் ஒவ்வொரு மாணவனும் தனது எதிர்காலம் பற்றி பலகனவுகளுடனே நுழைகின்றான். அவ்வாறு கனவு களைச் சுமந்து சென்று பல அர்ப்பணிப்புகளைச் செய்து 5 வருடம் கல்வி பயின்று பட்டதாரி-களாகி வெளியில் வந்தால் இங்கு நிலைமை தலைகீழாக மாறிக் காணப்படுகின்றது. படித்த பட்டதாரிகள் எதுவித வேலையும் இன்றி வருடக் கணக்கில் தேங்கி வீட்டினுள்ளேயே அடைந்து கிடக்கும் நிலை. எமது நாட்டில் தலைவிரித்-தாடும் வேலையில்லாத் திண்டாட்-டமே இதற்கு காரணம்

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் 2015 இல் ஆட்சிபீடம் ஏறிய நல்லாட்சி அரசு வரை வந்த எந்த அரசும் பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்குவது தொடர்பான நிலையான கொள்கையினை வகுக்காமல் பட்டதாரிகளை பாராமுகமாக விட்டு விடுவார்கள். ஆனால் மேடைக்கு மேடை தமது அரசியல் இலாபம் கருதிப் பொய்ப் பிரச்சாரங்களைச் செய்து பட்டதாரிகளை ஏமாற்றி வருகின்றனர் என்பது அப்பட்டமாகி விட்டது.

அதாவது வரலாற்றில் முதல் தடவையாக உருவான நல்லாட்சி அரசு தான் ஆட்சிக்கு வந்ததும் பத்து லட்சம் தொழில் வாய்ப்புகளை உருவாக்கப் போவதாகவும் அதில் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்க உள்ளதாகவும் கூறி இன்று இரண்டரை வருடம் கடந்துள்ளது இதுவரை பத்தாயிரம் பேரைக் கூட வேலையில் அமர்த்த நல்லாட்சி அரசால் முடியவில்லை. அதனைத் தொடர்ந்து பல வாக்குறுதிகளை வழங்கிய நல்லாட்சி அரசால் இன்று வரை எதையும் நிறைவேற்ற முடியவில்லை. உதாரணம் நாட்டின் கல்வி அமைச்சர் 2015ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் 23000 பேரை ஆசிரியர் தொழிலுக்கு உள்வாங்கப் போவதாக கூறினார். அதனைத் தொடர்ந்து 2016 இல் இலங்கை ஜனாதிபதி அவர்கள் 7500 பட்டதாரி-களை தகவல் அறியும் உத்தியோக-த்தர்களாக நியமிப்பதாக கூறினார். இவர்கள் கூறும் எதுவும் இதுவரை நடைபெற்றதா என்று கேட்டால் ஒரே பதில் "இல்லை" என்பது தான். அவர்கள் அரசியல் இலாபம் தேடும் முகமாக பட்டதாரிகளை ஏமாற்றி வருவதை உணர்ந்த வடக்கு கிழக்கு பட்டதாரிகளாகிய நாங்கள் அரசியல் வாதிகளின் பொய் பிரசாரங்களை நம்பி நம்பி ஏமாந்தது போதும் என்றதுடன் எமக்கு ஒரு உண்மை வெளிப்படையாக தெரிந்தது" எமது நாட்டில் போராட்டம் இல்லாமல் எதையும் வென்றெடுக்க முடியாது" என்று எழுதப்படாத சட்டம் ஒன்று உள்ளமை எமக்கு வெளிப்படையாக விளங்கியது.

அதனை மனதில் கொண்டு கடந்த பெப்ரவரி மாதம் எமது காலவரையறையற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தினை ஆரம்பித்தோம். எமது போராட்டம் கிழக்கு மாகாண-த்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 21.02.2017 இல் ஆரம்பமானது அதனைத் தொடர்ந்து அம்பாறை, திருகோணமலை என கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டத்-திலும் வடக்கிலும் முன்னே-டுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2012ன் பின் பட்டம் பெற்ற அனைத்து பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கவேண்டும்
- பட்டதாரிகளை போட்டிப் பரீட்சை இன்றி தகுதி அடிப்படையில் நேர்முகத் தேர்வினூடாக நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.
- எதிர்காலத்தில் பட்டதாரிகள் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியாகும் அதே வருடத்தில் நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- 35 வயதுக்கு மேற்பட்ட பல பட்டதாரிகள் இன்றும் வேலையின்றி உள்ளனர் அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தொழில் வழங்கவேண்டும்

போன்ற கோரிக்கைகளுடன் எமது போராட்டம் தொடர்ந்தது. எமது போராட்டத்தை ஆரம்பத்தில் விமர்சித்த அரசியல்வாதிகள் எமது போராட்டம் நாட்கள் பல கடந்தும் உறுதியாக இருப்பதைக் கண்டு தங்களது அரசியல் இலாபம் கருதி பொய் வாக்குறுதிகளை வழங்க ஆரம்பித்தனர். அதிலே பொய் கூறுவதில் கலாநிதிப்பட்டம் முடித்தவர் ஹாபீஸ் நசீர் அகமட் சித்திரை மாதம் 4000 பேருக்கு தொழில் வாய்ப்பு என்றார். அவருடைய கலண்டரில் இன்னும் சித்திரை மாதம் வரவில்லை. சத்தியாக்கிரகம் இருந்து வரும் பட்டதாரிகளை மத்திய அரசின் உறுதிமொழியுடன் சந்திப்பேன் என ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தார். இன்னும் எங்களை வந்து சந்திக்கவில்லை இவ்வாறு அவர் தனது பொய் வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டிருந்த வேளையில் பங்குனிமாதம் 14ம் திகதி பிரதமரின் ஆலோசகர் பாஸ்கரலிங்கம் அவர்களுடன் பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது அக்கூட்டத்தில் 4703 பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக கூறி இதற்கு தனது அயராத உழைப்பே காரணம் என ஊடகங்களுக்கு கூறினார். அதுவும் 2 வாரத்தில் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கூறினார். இன்னும் முதல்வருடைய 2 வாரம் நிறைவு பெறவில்லை என்பது இங்கு வேடிக்கையாக இருக்கிறது இவ்வாறு பொய் வாக்குறுதிகளை கேட்டு தெருவில் கிடந்த பட்டதாரிகளாகிய நாங்கள் விரக்தி அடைந்து கிழக்கு மாகாணத்தில் 3 மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளும் இணைந்து மாபெரும் போராட்டத்தை ஏற்பாடு செய்து கடந்த சித்திரை மாதம் 25ம் திகதி கிழக்கு மாகாணசபைக்கு முன் நடாத்தினோம். அதற்கு முதல்வர் அவர்களும் மாகாணக்கல்வி அமைச்சர் அவர்களும் வழங்கிய ஒரே பதில் மத்திய அரசிடமிருந்து எழுத்து மூல அறிக்கை வராமையே பட்டதாரிகள் நியமன இழுபறிக்குக் காரணம் என கூறினர். அதனைத் தொடர்ந்து எமது போராட்டத்தை முடக்குவதற்காக எம்மீது சட்டத்தை ஏவி விட்டு பட்டதாரிகளுக்காக முன்னின்று செயற்பட்ட அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் வண.தென்னேஞானனந்ததேரர் மட்டு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் T.கிசாந் திருமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் S.சிவகுமார் மற்றும் செயலாளர் R.பிரகலாதன் ஆகிய நால்வரையும் முதலமைச்சரின் ஆலோசனையுடன் சிறையில் அடைத்தனர். இதற்கிடையில் 4,784 பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்கு MSD அனுமதி கிடைத்து விட்டதாகவும் இன்னும் இரு வாரங்களினுள் நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அடுத்த அரசியல் பிரசாரத்தை முதல்வர் வழங்கினார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இதற்கிடையில் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று வந்து பட்டதாரிகளைச் சந்தித்து 2 மாதம் அவகாசம் கேட்டுச்சென்றது. எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் 2 வாரத்தினுள் தீர்க்கமான முடிவு தருவதாக கூறிச்சென்றார்.


அரசியல்வாதிகளின் நிலைப்பாடுகள் அனைத்தும் ஒரேவிதமான பொய்ப் பிரசாரங்களாகவே இருப்பது மனவேதனை தருகிறது படித்து பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கே இந்த நிலைமை என்றால் அரசியல்வாதிகளிடம் மாட்டித் தவிக்கும் பாமர மக்களின் நிலையினை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்பது எமது பிரார்த்தனை.

எமது போராட்டம் இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. முதல்வரின் 4784 ஆசிரியர் நியமனம் 1700 ஆக சுருங்கி அதிலும் 259 பேருக்கே நியமனம் வழங்க முடிந்துள்ளது என்பது வெட்கத் தனமான செயலாகும். இதற்கிடையில் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் கூறிய 2000 திவிநெகும உத்தியோகத்தர் நியமனம் கூட இதுவரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்-தக்கது. 4 மாதங்கள் தொடரும் எமது போராட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கக் கூடிய ஆளுமையுள்ள தலைவன் ஒருவன் 2015.01.08 இன் பின் உருவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டை நிருவகிக்க கூடிய ஆளுமை உள்ளவர்கள் திரும்ப வருவதற்கான காலம் கனிய வேண்டும் என்பது பட்டதாரிகளாகிய எமது எதிர்பார்ப்பாக உள்ளது. பட்டதாரிகளின் இன்றைய மனநிலையில் எமக்கான தொழில் வாய்ப்பினை பெற்றுத்தரும் தலைவருக்கு கட்சி பேதம் மதபேதம் இன்றி உழைக்க கிழக்குமாகாண வேலையற்ற பட்டதாரிகளாகிய நாங்கள் முடிவு எடுத்துளளோம் அவ்வாறு எவரும் முன்வராத இடத்து எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகள் சுயேட்சையாக களம் இறங்கவும் தயங்கமாட்டோம்.

**"எமக்கான தீர்வு கிடைக்கும் வரை எமது போராட்டம் ஓயாது."**



## அறிவிற்கினிய துணுக்குகள்



"எந்த மரங்கள் ஆழமாய் போகின்றனவோ அவை உயரமாக வளரும்'

"கடவுள் ஒருவரிடம் மட்டுமே முழு உண்மை முழு அன்பு உள்ளது'

"ஆயிரம் மைலின்பயணம் ஒரு அடியில் ஆரம்பிக்கின்றது'

"வழிபாட்டில் குற்றம் ஏற்பட்டால் தான் வாழ்க்கையின் செயற்பாடு மாறும். செயற்பாட்டின் வெளிப்பாடே வழிபாடக அமைய வேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட் பணி அருண்
மத்தியாஸ் இல்லம், தமிழ்நாடு

# இளைஞனே...! விழித்தெழு...! ஒளி வீசு...!

இளைஞனே ! நீ எழுந்து
ஒளி வீச நீ ஒன்றும் சாதாரண
மத்தாப்புக்களல்ல ....

இளைஞனே ! அலையாக எழும்பி
ஓய்ந்து போக நீ கடல்
அலைகளல்ல ....

இளைஞனே ! நீ நெருப்பாக
கொழுந்து விட்டெரிந்து அணைந்து போக
நீ தீக்குச்சிகளல்ல ....

இளைஞனே ! பறவைகள் போல்
மாலையில் இசைத்து ஓய்ந்து போக நீ
சாதாரண இசைக்கருவியல்ல ....

இளைஞனே ! கணனியோடும் மற்ற
இயந்திரங்களுடனும் முடங்கிப்போக
நீ ரோபோக்களல்ல ....

இளைஞனே ! புத்தகங்களோடு புத்தகமாக
மறைந்து போக நீ வெறும்
எழுத்துக்களல்ல ....

மாறாக இறைவனோடும்
இறையாட்சியோடும் ஒளிவீசும்
பெரும் சுடராக வெற்றி நடைபோடும்
திலகம் நீ என்பதை
மறந்து விடாதே!



# மகிழ்ச்சி உன் கையில்



இளைஞனே !
எட்டடி எடுத்து வைக்க
ஓரடி விழவைத்தால்
வீழ்ந்தே கிடக்காதே
ஏழடி வைத்த போது
வீழ்ந்திடாத வீரனென்று
வீறுகொண்டெழுவாயேல்
ஏழேழு மலைகளையும்
கடப்பாய் நீ துணிவுடனே

நீ...
வாழும் நாட்களிலே
ஒரு நாள் துன்பம் என்றால்
துயரத்தை நினைந்தழுதே
காலத்தைக் கழிப்பாயோ
கரைந்து போகும் காலமதில்
கடந்து போகும் பல மகிழ்வு
துணிவுடன் போராடு
துயரமும் உனைக் கண்டு
தூரமாய் ஓடிப் போகும்

அன்பு உனக்கிருந்தால்
அலகைக்கு வேலையென்ன
தோல்வியே கலக்கமுற்று
தொலைந்திடும் மண்ணினின்று
மனிதரிடை பேதம் நீங்க
மனிதம் துளிர் விடுமோ
மதங்கள் சொல்வதென்ன
மகிழ்ச்சி உன் கையில்



தெல்மா
சடகோபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெங்கு காய்ச்சல் என்பது நுளம்பினால் பரவும் ஒரு வைரஸ் தொற்று ஆகும். அது டெங்கு வைரஸ்-மனிதன் - நுளம்பு - மனிதன் எனச் சுழற்சி முறையில் பரப்பப்படுகிறது. டெங்கு காய்ச்சலுள்ளவரை நுளம்பு கடித்தால் அதற்குத் தொற்றுகிறது. டெங்கு வைரஸ் நுளம்பை ஒன்றும் செய்வதில்லை. மாறாக 3-4 வார காலம் நல்ல உடல் நலம் உள்ள மனிதரிடம் வைரசைப் பரப்பிக் கொண்டே இருக்கும். நுளம்பு கடித்த 5 நாட்களுக்குப் பிறகே காய்ச்சலுக்கான அறிகுறிகள் உருவாகின்றன. இக் காய்ச்சல் ஒரு வாரம் அல்லது கூடுதலான காலம் நீடிக்கும்.


தொற்று கண்ட பெண் நுளம்புகளே தன் வாழ்நாளில் இரத்தம் தேவைப்படும் போதெல்லாம் தாராளமாக உலவி பகல் பொழுதில் மனிதனைக் கடித்து டெங்கு பரப்புகின்றன.

இலங்கையில் மழைக்காலம் வந்துவிட்டாலே டெங்குவின் தாக்கம் அதிகரிக்கின்றது. இதனால் பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

ஒரு நாள் இலேசான காய்ச்சல் வந்தால் அதில் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் அதிக காய்ச்சல், தலைவலி, விழிக்கோளங்களுக்குப் பின்புறம் வலி, தசை வலி, முட்டு வலி, குமட்டல், வாந்தி போன்ற அறிகுறிகளுடன் டெங்குக் காய்ச்சல் வரும். இவ்வாறான அறிகுறி தோன்றுமிடத்து அவசியம் இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. ஆரம்பத்தில் கண்டறிவதும் ஏற்ற மருந்து செய்வதும் கட்டாயமாகும்.

உண்மையில் டெங்குக் காய்ச்சலுக் கென்று தனிப்பட்ட மருந்து எதுவும் இல்லை. நல்ல கவனிப்பும் உடல் நீரின் அளவைச் சம நிலையில் வைத்துக் கொள்வதும் தான் முக்கியம். அத்துடன் வலியையும் காய்ச்சலையும் குறைக்க பரசிற்றமோல் வில்லையை பயன்படுத்தலாம். கடுமையான நோயாளிகளை நல்ல மருத்துவமனையில் வைத்து நன்றாக பராமரிக்க வேண்டும். பாரம்பரிய மருத்துவத்தில் பப்பாசி இலைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த பப்பாசி இலைச்சாறு மருத்துவத்தன்மை கொண்டதாகவும் உயிர்களைக் காக்கும் என்றும் கருதப்படுகின்றது.

டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் முக்கியமான வழி அவ் வைரஸைப் பரப்பும் நுளம்பைச் சரியான விதத்தில் கட்டுப்படுத்துவது தான் வீடுகளுக்கருகில் உள்ள தேங்கிய நீரில் தான் இனப்பெருக்கம் செய்கின்றன. வீடுகளின் உள்ளேயும் வெளியேயும் பயன்படுத்தாத டயர்கள், பூச்சாடிகள், பேணிகள், பிளாஸ்ரிக் பொருட்கள், தகரங்களில் நீரில்லாத படி பார்த்துக்கொள்ள வேண்டும்.



டெங்கு நுளம்பைத் தடுக்க அரசும் பல திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றது. சுகாதார அமைச்சு மூலமும் கல்வி அமைச்சு மூலமும் ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பு மூலமும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன. எனினும் மக்கள் ஒவ்வொருவரும் தமது அயலைச் சுத்தமாகவும் நீர் தேங்காமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் தமது பங்கை ஆற்ற வேண்டியது பாரிய பொறுப்பாகும்.

ஆதாரம் : நல்வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் பரிசு

ச.ஜான்பொஸ்கோ
சென்னை, தமிழ்நாடு



மாலை நான்கு மணி.மேற்கு திசையில் கதிரவன் சிவப்பு வண்ண அலைகளை அடுக்கடுக்காய் கம்பளம் விரித்தது போல வானத்தில் ஒளி வீசிக் கொண்டிருந்தான். மாலைத் தென்றல் மென்மையாக வீசிக் கொண்டிருந்தது. பறவைகள் கூட்டம் கூட்டமாய் பறந்து கொண்டிருந்தன.

இயற்கை எழில் கொஞ்சும் நளினத்தோடு சிறுமி லதா பள்ளிக்கூடம் முடிந்து புத்தக மூட்டையைத் தோளில் சுமந்துகொண்டு, சாப்பாட்டுக் கூடையை கையில் பிடித்துக்கொண்டு கூன் கிழவி நடப்பது போல் குனிந்து வந்துகொண்டிருந்தாள். மகளின் வருகைக்காக வழிமேல் விழிவைத்து பார்த்துக் கொண்டிருந்த தாமரை ஓடிப்போய் மகளின் புத்தகப் பையைக் கழற்றி எடுத்துக்கொண்டு, கையிலிருந்த சாப்பாட்டுக் கூடையை வாங்கிக் கொண்டாள்.

'கணக்கு பரீட்சை எப்படிம்மா எழுதினே?' என்று கேட்டாள் தாமரை. 'நல்லா எழுதிருக்கேம்மா, நூறு மார்க்கு வரும்மா' என்று மூன்றாம் வகுப்பு படிக்கும் மகள் பெருமையாகக் கூறியதைக் கேட்டு உள்ளமெல்லாம் பூரிப்படைந்தாள் தாமரை.

'அம்மா என் பக்கத்திலே உட்கார்ந்திருந்த ரமேஸ் ஒண்ணுமே படிக்கல சரியான புண்ணாக்குமா. அவன் என்னைப் பார்த்து காப்பியடிச்சான் நான் காட்டவேயில்லை. டீச்சர் அவனை நல்லா திட்டினாங்க' என்று லதா கூறியதைக் கேட்டு திகைத்துப்போன தாமரைக்கு பழைய நினைவுகள் ஒரு கணம் வானில் தோன்றும் மின்னலைப் போல பளிச்சிட்டது.

கல்யாணமான புதுசில் தன் கணவர் அவருடைய நண்பர்களிடம் 'என் மனைவி ஒரு புண்ணாக்கு. அவளுக்கு ஒன்றுமே தெரியாது' என்று கூறி அறிமுகம் செய்யும் போதெல்லாம் தன்னுடைய உள்ளத்தில் ஓர் எரிமலை வெடிப்பது போன்று இருக்கும் உள்ளக் குமுறலை நினைத்துப் பார்த்தாள்.

தன் கணவனிடம் 'ஏன் இப்படி என்னை புண்ணாக்குன்னு சொல்லுறீங்க... உங்களுக்குப் புண்ணாக்குன்னா ரொம்ப பிடிக்குமா?' என்று கேட்டதற்கு 'நீ ஒரு பட்டதாரியாக இருக்கலாம். படிச்சு பட்டம் வாங்கிட்டா பெரிய கொம்புனு நினைப்பா? என்னதான் பெண்கள் படிச்சு பட்டம் வாங்கினாலும் பெண்கள் எப்பொழுதும் ஆண்களுக்கு அடிமை தான். உங்கள் வேலையே அடுப்பு ஊதுவது தான். அதுக்காகத்தான் ஆண்டவன் பொம்பளைங்களை படைச்சிருக்கான் தெரியுமா?' என்று கூறியதை அவளால் மறக்கவே முடியவில்லை.

ஆகவே, இந்த ஆணாதிக்க சமுதாயத்தில் தன் மகளும் ஒரு கொத்தடிமையாகி விடக்கூடாது என்பதற்காக அவளுக்கு அறிவையும், வீரத்தையும் புகட்டி வளர்க்கிறாள். அவள் மீது எப்போதும் கண்ணும் கருத்துமாய் இருக்கிறாள். இப்படி பழைய நினைவுகளை அசை போட்டுக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்ததும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லதாவின் உடைய ஷுக்களை கழற்றிவிட்ட தாமரை, 'லதா, ரமேஷ் காப்பி அடிச்சா அது தப்புதான். அதுக்காக அவனை புண்ணாக்குன்னு சொல்லலாமா?. உங்க அப்பா புத்தி உனக்கும் வருதா?' என்று கொஞ்சம் கோபமாகக் கேட்டாள்.

'புண்ணாக்குன்னா தப்பாம்மா' என்று கேட்டதற்கு 'ஆமாம், தப்புதான். அடுத்தவங்களைப் புண்ணாக்குன்னு இழிவாச் சொல்லக்கூடாது, அவங்க மனசு எவ்வளவு கஷ்டப்படும். யோசி! உன்னைப் புண்ணாக்கு என்று சொன்னா உனக்குப் பிடுக்குமா?' என்று கேட்டாள் தாமரை. 'பளார்னு ஒண்ணு கன்னத்தில் கொடுத்திடுவேன்' என்று பளிச்சி-ன்னு சொன்னாள் சிறுமி.

'உங்க அப்பாவும் என்னை கல்யாணமான புதுசுல அடிக்கடி புண்ணாக்கு, புண்ணாக்குன்னு தான் சொல்லுவார். எனக்கும் மனசு ரொம்ப கஷ்டமாயிருக்கும். ஒரு நாள் உங்க அப்பாவுக்கு பிறந்த நாள் வந்துச்சு, அரைக் கிலோ புண்ணாக்கு வாங்கி அழகா கேக் பண்ணி பிறந்த நாள் பரிசா கொடுத்தேன். அதை வாங்கி பிரித்துப் பார்த்த உங்க அப்பாவுக்கு ஒரே ஷாக்!. அதில் இருந்து என்னை புண்ணா-க்குன்னு சொல்றதையே விட்டுட்டாரு' என்றாள்.



'அப்படியாம்மா இனி நானும் யரையும் புண்ணாக்குன்னு சொல்லமாட்டேன்' என்றாள் லதா. 'நல்ல பொண்ணு, மத்தவங்க மனசு புண்படுற மாதிரி பேசக்கூடாது, சரியா....

'சரிம்மா' என்றாள் லதா.

'சமத்துக் குட்டி' என்று கூறி கட்டிப் பிடித்து பிஞ்சு கன்னத்தில் முத்த மழை பொழிந்தாள் தாமரை.

'போய் கை, கால், முகத்தைக் கழுவிட்டு வா உனக்கு பிடித்த-மான பஜ்ஜி செய்து வச்சிரு-க்கேன், சாப்பிடலாம்' என்றாள் தாமரை. பஜ்ஜி சுவையை மனதில் அசை போட்ட சிறுமியின் முகம் மாலையில் மலரும் மல்லிகைப் பூ போல மலர்ந்து விட்டது.



*கண்ணா! ராத்திரி தூங்கும் போது செல்போனை சார்ஜ்ல போடாதப்பா!*

*ஏம்ப்பா?*

*பேட்டரி சூடானா வெடிக்கலாம்.....*

*அது தெரியும்ப்பா... அதனாலதான் சார்ஜ்ல போடும்போது பேட்டரியை கழட்டி வெச்சிடுவேன்*

**டீச்சர் : மனுசனா பிறந்தா ஏதாவது சாதிக்கவேணும்....**

**மாணவன் : மன்னிக்கோணும் டீச்சர்! நான் குழந்தையா தான் பிறந்தேன்.....**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி ! உலகு வாழ்த்தும் பாடும்

நேர்மையாக வாழ வேண்டும்
நீதிக்காக வாழ வேண்டும்
கூர்மையான அறிவு வேண்டும்
கொள்கை உறுதி வேண்டும்
தம்பி கொள்கை உறுதி வேண்டும்

பாடுபட்டு உழைக்க வேண்டும்
பசுமை செழிக்க வேண்டும் - நல்ல
நாடு உயர வேண்டும் இனிய
நாளும் மலர வேண்டும்
தம்பி வாழ்வு மலர வேண்டும்

சோம்பலின்றி வாழ வேண்டும்
சிட்டுக்குருவி போலே - தம்பி
தேம்பி இரந்தவை வாழ்வதில்லை
தினமும் தேடியுண்டே வாழும்
தம்பி தேடியுண்டே வாழும்

சின்னஞ் சிறிய எறும்பைப் பாராய்
சேர்ந்து உழைக்கம் சீராய் - தம்பி
உன்னை நம்பு உயர்வு சேரும்
உலகும் வாழ்த்துப் பாடும்
தம்பி ! உலகும் வாழ்த்துப் பாடும்



அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்

கவிஞர், அருட்கவி, C.N.துரைராஜா,
திருகோணமலை.





# உள்ளம் மகிழ உதடு சிரிக்கும்

பள்ளிப் பருவம் சிறுவர் பயனை
கள்ளமில்லா காரியம் தானும் கண்டு
வெள்ளையுள்ள பெற்றோர் போற்றும்
உள்ளம் மகிழ உதடு சிரிக்க
மெல்ல வரும் மழை நீரில்
மிதக்கும் கப்பலை விட்டு விளையாடும்
சிறுவர் செயல் காண பெற்றோர்
சீர் வரிசை செல்லவும் வேண்டுமா?

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும்
மழலைச் சொல் கேட்டு மயங்கி
நிலவினை காட்டி சோறு ஊட்டும்
அன்னை தந்தை அன்பை காண
கனவுலகில் வாழ்வது போல் நாம்
களிப்புற்று இருக்கும் நிலை காண
சிறுவர்கள் தன்னால் முடியும்
சிந்தனையில் வைப்பாய் திருமனமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குனரும் "திருமலை தீபம்" பத்திரிகையின் ஆசிரியருமான அருட்பணி என். சீ . அருள்வரதன் அடிகளாருடனான நேர்காணல்

**அருட்தந்தை அவர்களே ! குருத்துவப் பணியில் வெள்ளி விழாவைக் கொண்டாடவுள்ள தங்களை அலை ஓசை கலைத்தொடர்பக் குடும்பம் நேர்காணலில் பெரு மகிழ்வடைகின்றது.**

**கொட்டியாரத்து மண்ணின் முதல் அருட்தந்தையாக இறைவனருளால் உருவாகிய தாங்கள் குருவாக அர்ப்பணமாவதற்கு காரணமான ஏது நிலைகள் பற்றிக் கூற முடியுமா?**

எனது குருத்துவப் பணிக்கு காரணமாக எனது பெற்றோரைக் குறிப்பிட முடியும். அவர்களின் உற்சாகப்படுத்தலும் செபங்களும் என்னை குருவாக உருவாக்குவதற்கு உந்துதலாக இருந்தன. அது தவிர மூதூரில் ஓர் அருட்சி நிலை உருவாக்கியதற்கு இறைவன் என்னைக் கருவியாக்கினார். என்னையடுத்து அருட்பணி. யூஜின் (அ.ம.தி), அருட்தந்தை சுகுணேந்திரன் குருஸ், அருட்தந்தை மதுராங்கன் குருஸ், அருட்தந்தை ரஜீவன், அருட்தந்தை ஜெயரட்ணம் ஆகியோரும் அண்மையில் குருவாக திரு நிலைப்படுத்த இருக்கும் அருட்தந்தை அன்ரனி ஜெயன்சன் லொயிட் ஆகியோரும் எனது வழியைத் தொடர்ந்து இறை பணியாற்ற அழைக்கப்பட்டிருந்தனர்.

**குருத்துவப் பணியில் வெள்ளி விழாவை எதிர்வரும் செப்டம்பர் 16 இல் பூர்த்தி செய்யும் தங்களின் குருத்துவ அழைப்பின் அனுபவங்கள் பற்றியும் தங்களுடைய ஆன்மீகப் பணி, சமூகப் பணியில் தங்களுடைய அனுபவங்கள் பற்றி கூறமுடியுமா?**

எனது குருத்துவப் பணியில் வெள்ளி விழாவைப் பூர்த்தி செய்தது என்பது என்னைப் பொறுத்தவரை நீண்ட நெடும் பயணமாகும். நான் எந்தப் பங்கிற்குச் சென்றாலும் குரு என்ற ரீதியில் ஆன்மீகப் பணியோடு ஏனைய மத அன்பர்களுடன் தொடர்புகளைப் பேணி ஒரு சமரச நிலையை உருவாக்குவதே எனக்கு விருப்பமான சமூகப் பணியாகும்.



**தாங்களின் தந்தையரான திரு.நிக்கலாஸ் அவர்கள் ஒரு தமிழ்ப்பண்டிதர். எழுத்தாளர் மாத்திரமல்ல ஒரு சிறந்த அதிபராகவும் மிளிர்ந்துள்ளார். அவரிடமிருந்து தாங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் என்ன?**

எனது தந்தையார் ஒரு தமிழ்ப் பண்டிதர் அதிபர் மட்டுமல்ல ஒரு நல்ல சமய வாதியாகவும் சமூகப் பணியாளனாகவும் திகழ்ந்தார். எங்கள் வீட்டிற்கு பல விதமான தொடர்புகளையுடைய பலர் வருகை தருவார்கள். அவர்களுடனான கலந்துரையாடலை ஆர்வமுடன் செவிமடுப்பது எனது வழக்கமாகும். அந்த சொல்லாடலின் சங்கதிகளை என் மனதில் பதிய வைத்துக் கொள்வேன். அது தவிர தந்தையார் வாசித்த புத்தகங்களை வாசிப்பதும் எனது பழக்கமாகும். இவ்விரண்டு நடைமுறைகளும் எனது மனதில் ஆழமாகப் பதிந்து விட்டன. அவை என்னுள் தமிழ் மொழியில் புலமையையும் பற்றையும் உருவாக்கி விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூதூரில் இடம்பெற்ற இனமுரண்பாடுகளின் போது தங்கள் தந்தைக்கு ஏற்பட்ட அகால மரணம் மூதூர்ப் பிரதேசத்தையும் தங்களையும் பாதித்திருந்ததை அறிவோம். இதை எவ்வகையில் உணர்கிறீர்கள்?**

உண்மையில் எனது தந்தையார் இன, வன் செயல்களின் போது அகால மரணமடைந்து மூன்று நாட்களின் பின்பே மூதூருக்கு எனக்கு வரக் கிடைத்தது. அவரது சடலத்தைக்கூட என்னால் பார்க்க முடியவில்லை. அதனால் இன்னும் அவர் உயிரோடு இருக்கிறார் என்ற உணர்வு தான் என்னுள் உள்ளது. அது தவிர அவர் அதிபராகக் கடமையாற்றிய மல்லிகைத்தீவு கங்குவேலி போன்ற பிரதேசத்து மக்கள் அவரை இன்னும் நினைவு கூறுகிறார்கள். அப் பிரதேசத்-துக்கு நான் சென்றால் அங்குள்ள மக்கள் என்னை குருவாக அல்லாமல் நிக்கலாஸ் ஐயாவின் மகன் என்று தான் அழைக்கின்றார்கள். இது அவரின் உடலை இன வாதிகள் அழித்தாலும் அப் பிரதேச மக்களின் மனதில் இன்னும் வாழ்கிறார் என்பதை உணர்த்துகிறது.

**மட்டக்களப்புப் பிரதேசத்தில் நீண்டகாலமாக பங்குத் தந்தையாக பணியாற்றியுள்ளீர்கள். அப் பிரதேச மக்களுடனான தங்களின் அனுபவங்கள் பற்றி அறிய விரும்புகின்றோம்?**

மட்டக்களப்பில் செங்கலடி ஆயித்திய மலை சொறிக் கல்முனை ஆகிய பங்குகளிலும் கடைசியாக பாலமீன் மடு பங்கிலும் பங்குக் குருவாக பணியாற்றி-யுள்ளேன். அம் மக்களின் ஆன்மீகப் பணியிலும் சமூகப் பணியிலும் என்னையும் இணைத்துக்கொண்டு மிகவும் இக்கட்டமான காலப் பகுதியிலும் திருப்தியான பணியை ஆற்றியுள்ளேன். இன்னும் பாலமீன்மடுவிலுள்ள கோயில் ஐயருடன் ஒரு ஐக்கியமான தொடர்பாடலும் தொடர்புகளும் நிலைத்தே வருகின்றது.

**திருகோணமலை மறைமாவட்டம் தனி மாவட்டமாக உருவானதையிட்டு தங்களின் கருத்துக்களைக் கூறமுடியுமா?**

திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டமாக இருந்த போது ஓர் ஐக்கியமும் வலிமையும் இருந்தன. இருமாவட்டங்களிலுமுள்ள அருட் தந்தையர்கள் பரந்து பட்ட ரீதியில் சேவையாற்றக்கூடிய நிலைமை இருந்தது. தூரம் அதிகமென்றாலும் ஒருங்கிணைப்பு நிலைத்திருந்தது. ஆனால் இப்போது இரு மறை மாவட்டங்களாக பிரிந்த போது அருட்தந்தையர்கள் தத்தமது பிரதேசத்திற்குள் பணிபுரிய வேண்டிய கட்டமைப்பு உருவாகியுள்ளது. இது சேவையின் பரந்துபட்ட தன்மையை பாதிக்கின்றது என்பதே எனது கருத்து எனினும் பிரிந்ததன் மூலம் திருகோணமலை மாவட்டத்திற்கு தனி ஆயர் திரு நிலைப் படுத்தப்பட்டதால் சிறப்பான கவனம்என்று எல்லா வழிகளிலும் முன்னேற்றம் காண உதவியாகவும் உள்ளது.

**கவிதையாற்றலிலும் கலை நுட்பங்களிலும் திறன் படைத்த தாங்கள் மறைக்கல்வி நடுநிலைய இயக்குனராகவும் திருமலை தீபம் பத்திரிகையின் ஆசிரியராகவும் அதேவேளை கன்னியா பங்கின் பங்குக்குருவாகவும் பணியாற்றி வருகிறீர்கள். இத்தனை வேலைப் பழுக்களையும் எவ்வாறு உற்சாகமாக எதிர்கொள்கிறீர்கள்?**

நான் ஓர் ஆயரின் பிரதிநிதி. ஆயர் என்னை என்ன பணி செய்ய அழைக்கிறாரோ அதை அமைச்சலுடன் செய்து முடிக்க வேண்டியது குருவாகிய எனது தலையாய கடமையாகும். ஆயரவர்கள் எப்போதும் யாருக்கு என்ன பணியை ஒப்படைக்க வேண்டும் என்பதைத் தீர ஆலோசித்தே செய்வார். எனவே எனக்கிட்ட பணியை இறைவனின் பணியாக ஏற்றுச் செவ்வனே செய்து கொண்டிருக்-கின்றேன். இங்கு வேலைப் பழு என்று எடுத்துக் கொள்ள முடியாது. இறைவன் இவ்வுலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிலுவையைத் தந்துள்ளார். அதைச் சுமக்க வேண்டிய வலிமையையும் தந்துள்ளார். எமது கடமையை நான் செய்கிறேன். மிகுதியை இறைவன் பார்த்துக் கொள்வார் என்ற விசுவாசத்தில் திடசங்கற்பமாகவுள்ளேன்.

நன்றி அருட்தந்தை அவர்களே!

**நேர்கண்டவர்:**

**கிறிஸ்டி முருகுப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "திருப்பம்"

- ஆ. இராசேந்திரம்
-மூதூர் -

புஸ்பம் கவிஞர் உலகம் கற்பனை செய்யக்கூடிய அளவு அழகியல்ல. அதேநேரத்தில் அழகற்றவளுமல்ல. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கின்ற பெண்மைக் குணங்கள் அமையப் பெற்றவளாக, நல்ல கிறிஸ்தவளாக, பெயருக்-கேற்ற தன்மை கொண்டவளாக, உத்தமியாக வாழ்ந்து வருபவள்.

இலக்கியத்திலே இலக்கணம் காணக்கூடிய அளவு கற்காவிட்டாலும் மொழி இலக்கியத்திலே நல்ல தேர்ச்சி பெற்றவள். திருத்தமான உரைகளைக் கேட்டும் பிழையற எழுதப்பட்ட பனுவல்களைப் படித்தும் நாளாந்தம் தனது அறிவை மெருகூட்டுபவள்.



உள்ளூரிலே அவள் அறியாத "நாவல்"களும் அறிஞர் பேருரைகளும் இல்லை என்றே கூறலாம். அந்த அளவு துருவி அறிந்து படிப்பவள்.

பக்க வீட்டினனான நானும் கூட அவளது படிப்புக்கு பக்கதுணையாக இருந்தேன்.

நான் ஓர் இளைஞன். இந்துப் பரம்பரையினன் இருப்பினும் புஸ்பத்துக்கு புத்தகங்கள் தேடிக் கொடுப்பதில் எனக்கோரின்பம். அதே வேளையில் அவளும் தனக்குக் கிடைப்பதைப் படித்து எனக்குத் தருவதிலும் பேரின்பம் காண்பவள். இப்படி இனம் புரியாத பற்று இருவரையும் இணைத்து வளர்த்தது.

ஓடும் நீரானது தான் ஓடக்கூடாது என்று நினைத்தாலும்; பள்ளமானது விட்டுவைப்பதாக இல்லையே.

இருவருமே குமரப்பருவத்தினர். எனவே பருவ தாகம் இருவரையும் விட்டுவைக்கவில்லை.

புத்தகப் பரிமாற்றத்தின் ஏற்றம்; கருத்தொரு-மித்த பாசத்திலே புதைந்து போயிற்று.

இருந்த போதும் "மதம்" என்கின்ற மாபெரும் திரை இருவரையும் பிரிக்க இடையே விழுந்தது.

இந்த மர்மத்திரையானது இரு உருவங்களையும் மறைக்க முடிந்ததே தவிர ஒரு மனப்பட்ட இரு உள்ளங்களையும் மறைக்க முடியாமல் போய்-விட்டது.

நித்தம் நித்தம் யேசு மரி, சூசை இவர்களின் பொற் பாதங்களை புஸ்பங்களிட்டு பூசித்து வரும் புஸ்பம் மத மாற்றத்திற்கு இடங்-கொடாது இரும்புருப் பெற்றிருந்தாள். ஏனென்றால் அவள் உண்மை வழி வந்த கிறிஸ்தவள் என்பதால்,

நானோ! காதலுக்காக மதத்தை விட மனங்-கொண்டேன். ஆனால் பெற்றார் உற்றார் சீற்றம் இவர்களின் பரம்பரைப் பண்புகளுக்கு பங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுமே என்கின்ற அச்சமுங்கூட ஆட்கொண்டது. இருப்பினும்

"காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்."

என்கின்ற கவிஞர் கூற்றுப்படியும் காதலில் தோல்வி கண்ட இன்றைய இளைஞர் யுவதிகளின் கொள்கைகளை எதிர்மாறாக்கி எனக்குண்டான காதலுக்கே சாவு மணியடித்து காதலுக்கு முற்றிட ஒருகணம் முனைந்தேன். ஆனால் சார் பொருள் சாரும் "மனம்" என்கின்ற மாயக்குரங்கால் இதய எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இருவர் நோக்குகளும் ஒரு நோக்காகி திருமணத்திலே நிறைவு கண்டது. ஒரு மதப்பட்ட திருமணமாக அல்ல, இரு மதப்பட்ட திருமணமாக,

காலரதம் இரைந்து கொண்டு நிற்கவில்லை. ஓடிக்கொண்டேதான் இருந்தது.

புஸ்பம் வீட்டுக் கடமைகளிலே கிரமமானவளாக, பத்தாவுக்கு ஏற்றவளாக, குடும்ப குல விளக்காக வாழ்ந்து வருகிறாள்.

காரியாலக் கடமைகளை முடித்து வீடுவரும் என்னை மிகவும் கண்ணியமாக வரவேற்று நன்கு உபசரிப்பாள்.

காதலின் பரிசாக எமக்குக் கிடைத்த ஆணும் பெண்ணுமான இருபிள்ளைகளையும் எனது ஆணைப்படியே கிறிஸ்தவ நெறி முறைகளிலேயே சீராக வளர்த்து வருகின்றோம்.

எவ்வளவு வேலைப்பழுக்கள் இருந்த போதும் புஸ்பம் நேரம் எடுத்து படிப்பதை மட்டும் விட்டுவிடவில்லை.

பிள்ளைகளையும் சேர்த்து வைத்துக்கொண்டு தினம் மாலையானதும் செபிக்கத்தவறுவதில்லை. பெரும்பாலும் நான் இருக்கும் போதுதான் சற்று உரத்த வாசிப்பு நடைபெறும். ஆனால் கதைகள் கட்டுரைகள் முன்னர் வாசித்தவாறல்லாது கேட்போர் நெஞ்சை உருக்கும் வகையில் ஞானவாசகங்கள், பழைய புதிய வேதாகம வரலாறுகள், மனிதர்களாக வாழ்ந்து புனிதர்களாக போற்றப்படுகின்றவர்களின் பாடுகள், மரணம், வாழ்வு முறைகள், பிறமதப் பக்தர்களாக வாழ்ந்து மனம்மாறி உண்மை வழிவந்தவர்கள், நாஸ்தீகர்களாக வாழ்விழந்து வாழ்ந்து உண்மை ஒளிகண்டவர்கள், இப்படிப்பட்ட உணர்வூட்டும் வாசகங்களாகவே இருந்தன.

இவை அத்தனையுமே அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமாப்போல நாளும் பொழுதும் என்னை கபளீகரித்துக் கொண்டே இருந்தன. போதாக் குறையாக திருமலை மாவட்டத்திலே மூன்றாம் கட்டையிலே அமைவுற்று, மதபேதம் இல்லாது சகல மக்களுக்குமே அருள் மழை பொழியும் இறை இரக்க ஆண்டவர் ஆலயம்: சீனக்குடா புனித அந்தோனியார் ஆலயம். இவ்வாலயங்களிலே வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறுகின்ற குணமளிக்கும் வழிபாடுகள்: இவற்றிக் கெல்லாம் அடிக்கடி அழைத்துச் செல்லுவாள். நானும் மனம் கோணாது செல்வேன். காலப்போக்கில் அப்படிப்பட்ட இடங்களுக்கு போகாதிருப்பதை பெருங் குறையாக நான் கண்டு கொண்டதால் தவறாது வந்தேன்.

அங்கே நடக்கின்ற அதிசயங்களைக் கண்ணாலே பார்த்தேன். மருந்து மாயம் எதுவுமில்லாது வருத்தர்கள் சுகம் பெறுகின்றனர். வைத்தியரால் கைவிடப்பட்ட பிணியாளர்கள் பலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகம் பெறுகின்றனர். அசுத்த ஆவியினால் பீடிக்கப்பட்ட பலர் விடுபடுகின்றனர். பில்லி சூனியக் கட்டுக்கள் பூரணமாகவே அகற்றப்-படுகின்றன.

இவ்வாறாகச் சுகம் கண்டவர்கள் தருகின்ற நேரடியான சாட்சியங்களைச் சிந்திக்கலானேன். வேறு எனக்கு என்னதான் வேண்டும் ?

இயல்பாகவே எல்லாம் நடந்தது.

மதத்தை 'மதமா'கப் பார்க்காமல் வாழ்வின் தத்துவமாக பார்க்கலானேன்.

– யாவும் கற்பனை –





## VISITING PLACES

| | |
|---|---|
| Church of the Annunciation | Church of the Ascension |
| Garden of Gethsemane | Last Supper Room |
| Mount of Beatitudes | Bethlehem |
| Church of Multiplication | Church of Nativity |
| Baptism | Church of Holy Sepulcher |
| Boat Ride in the Sea of Galilee | Way of the Cross |
| Church of Agony | Cana |
| Calvary - Tomb of Jesus | Western Wall |
| Jericho/ Sycamore tree | also including a visit to |
| Nazareth | Milk Grotto |

- ஸ்டார் ஹோட்டல்களில் தங்குமிட வசதி.
- கேபிள் கார் பயணம் ஜெரிக்கோவிலிருந்து ஆண்டவர் சோதிக்கப்பட்ட மலை வரை

✓ 2017ம் ஆண்டில் புறப்படும் திகதி ஒக்ரோபர் 11

✓ முதலில் பதிவு செய்யும் 10 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்

✓ பதிவு செய்ய வேண்டிய இறுதித் திகதி 2017.08.15

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

அருட்பணி ஜொஹான் பேர்ணாட்
பணிப்பாளர். "அலை ஓசை" கலைத் தொடர்பகம்
இல 17 புனித அந்தோனியார் வீதி. திருகோணமலை.
தொ.இல - 0776771119.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களே! மாற்றம் வேண்டும் ஏற்றம் கண்டிட!!



சந்திரகுமார்
(முத்தூர் நிலா)

இளைஞர்களுக்கான இச்சிறப்பிதழில் இளைஞர்களின் எண்ணப்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் மேலும் ஈர்ப்புக்கள் பற்றிய உள்ளடக்கங்களுடன் பலவற்றையும் அலசலாம் என நினைத்தேன். ஆனால் மறுபுறத்தில் அவைகளை ஆணித்தரமாக வார்ப்பது கட்டாய தேவைப்பாடாக அமைந்ததை உணர்ந்தேன். ஆகவேதான் இவ் ஆக்கத்தில் பலவற்றை சுட்டிக்காட்ட விளைகிறேன். ஆவை அனைத்தும் பிரயோக மற்ற காட்டுமரம் போல இளைஞனே நீ வீறுகொண்டு ஓங்கி வளர்வதற்கல்ல. மாறாக பண்படுத்தப்பட்ட வளமான உரமிடப்பட்ட மனிதனாக வளர்ந்து உன்னையும் உலகையும் ஆட்கொள்ள வேண்டுமென்பதே எனது குறிக்கோள்.

இளைஞனே! காட்சி வடிவமாக உனது மனதிற்குள் பதிவு செய்த நல்லவற்றை செயல் வடிவமாக்க வேண்டும். செயலாக்கம் பெறாத கனவுகள் செத்த பாம்பிற்குச் சமம்.

இது தான் இலக்கு என தீர்மானித்து அதற்கான திட்டங்களைத் தீட்டி அதனை மனதின் வழியாக தினமும் காட்சிகளாகக் கண்டு வருவதை மற்றவர்களும் காணும் வண்ணம்,கா்ண்பிக்கும் போது மட்டுமே உங்களின் வெற்றி அங்கீகாரமாக மாறும். எவற்றையும் அங்கீகாரமாக்காமல், நீங்கள் மட்டும் மனக்கண்களால் பார்த்துக் கொண்டும்,மற்றவர்களிடம் வாய் வார்த்தைகளால் பேசிக்கொண்டும் இருந்தால் ஒருநாளும் உங்களின் கனவை நனவாக்கிப் பார்க்கமுடியாது. “எதிர்காலத்தில் நீங்கள் செய்யப் போவதை இன்று சொல்லக் கேட்டு யாரும் மதிக்கப் போவதில்லை.”

ஆகவே இளைஞனே விழித்தெழு “வெறும் கையில் முழம் போடுவதை அறவே ஒதுக்கிவிடு” வாழ்க்கையில் இற்றை வரை நீ கடந்து வந்த அத்தனை சுவடுகளையும் ஒரு முறை மீட்டுப்பார்!

**“பெய்யும் மழைகளுக்கெல்லாம் வார்ந்தோடும் நீரா? நீ இளைஞனே! இல்லை**

**“ அடிக்கும் காற்றுக்கெல்லாம் சாய்ந்து போகும் நாணலா? நீ இளைஞனே! இல்லை**

**“வாட்டும் வெயிலில் வரண்டு போகும் நிலமா? நீ இளைஞனே! இல்லை**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"விளக்கை சுற்றி வட்டமிட்டு மடிந்து போகும் விட்டில் பூச்சியா? இளைஞனே நீ! இல்லை

இளைஞனே! உன்னைத்தான் அடுத்த தலை முறை பின் தொடர்கின்றது என்பதை நினைவில் நிறுத்து அதாவது அடுத்த தலைமுறையின் மாதிரி நீயாகத்தான் இருக்கின்றாய். நீ மட்டும் வாழ்ந்தால் போதுமா? உன்னைச் சுற்றியுள்ளவர்களும் வாழ வேண்டாமா? அல்லது மற்றவர்களும் உன்னால் வாழ்ந்ததாக சரித்தரம் படைக்கவேண்டாமா?

பாப்பா பாட்டு பாடுவோமா



"Online" ல் விளையாடு பாப்பா–நீ
"Offline" இருத்தல் ஆகாது பாப்பா
"Phone" ல் விளையாடு பாப்பா–ஒரு
"Tab" ஐயும் விடாதே பாப்பா !!!

காலை எழுந்தவுடன் "Facebook"–பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல "Status"
மாலை முழுதும் பல "Photos"–என்று
பழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா !!!

"Like" பண்ணி உசுப்பேத்து பாப்பா–நல்லா
"Comment" பண்ணி கடுப்பேத்து பாப்பா
"Wifi" நமக்கு துணை பாப்பா–வேறு
செலவு வர மாட்டாது பாப்பா !!!

இளைஞன் எதிர் குடும்பம்
இளைஞன் எதிர் சிறுவர்கள்
இளைஞன் எதிர் பெரியோர்கள்
இளைஞன் எதிர் சமூகம் மற்றும் சமூக அந்தஸ்து, சமூக கொள்ளைகள், நீதிகள்
இளைஞன் எதிர் நண்பர்கள்
இளைஞன் எதிர் சமயம் அல்லது மதம்
இளைஞன் எதிர் கல்விமற்றும் தொழில்கல்வி
இளைஞன் எதிர் சமூகஊடகங்கள்
இளைஞன் எதிர் தொழில் வாய்ப்புக்கள்
இளைஞன் எதிர் திரைப்படங்கள்,கதாநாயகர்கள் மற்றும் கதாநாயகிகள்
இளைஞன் எதிர் போதைப்பொருட்கள்
இளைஞன் எதிர் அரசியல் கட்சிமற்றும் செயல்கள்
இளைஞன் எதிர் காதல்
இளைஞன் எதிர் சிகையலங்காரங்கள், ஆடைகள் மற்றும் ஆபரணப்பாவனைகள்
இளைஞன் எதிர் வாகனமோகம்




இளைஞன் எதிர் வேலையில்லாத்திண்டாட்டம்
இளைஞன் எதிர் பொருளாதாரநிலைமை
இளைஞன் எதிர் எதிர்பார்க்கும் தொழிலும் ஊதியமும்
இளைஞன் எதிர் விளையாட்டுக்கள் / போட்டிகள்
இளைஞன் எதிர் தொழில்நுட்பங்கள்
இளைஞன் எதிர் விஞ்ஞான வளர்ச்சியும் கண்டுபிடிப்புகளும்
இளைஞன் எதிர்தொலைத் தொடர்பு சாதனங்கள் குறிப்பாககையடக்கத் தொலைபேசி
இளைஞன் எதிர் நிதி நிறுவனங்கள் மற்றும் கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக பலவிடயங்களால் இளைஞர்களாகிய நீங்கள் ஈர்க்கப்படுகிறீர்கள். அதைத் தவறென நான் சொல்லவரவில்லை. மாறாக இளைஞனே நீ இந்த பயனற்ற நீரோட்டத்தில் பயனுள்ளவனாக மாற வேண்டும். தேர்வு உன்னுடையதே!!!!!!!!!!!!!

**"எட்டு மணி நேரத்தில் ஒரு மரத்தை வெட்டி வீழ்த்த நான் தயாராகும் போது, வெட்டப் பயன்படும் கோடரியை ஆறு மணிநேரம் தீட்டுவேன்"**

**— ஆபிரகாம் லிங்கன் —**

இவ்வார்த்தை எவ்வளவு தூரம் ஆழமான பல விடயங்களைத் தருகின்றது. சிந்தித்துப் பாருங்கள் இளைஞர்களே!

நீங்கள் சிறப்பான பாதையில் வளமான நிலத்தில் விதைக்கப்பட வேண்டியவர்கள். அப்போதுதான் நீங்கள் விருட்சமாக மாறி பலம் கொடுப்பவர்கள் ஆவீர்கள் எனும் உண்மையை உணர்கிறீர்களா!


உயரப்பறக்கும் பறவைகள் கீழ் நோக்கிப் பார்ப்பதில்லை. இளைஞனே நீ உயர்ந்த நிலையை அடைய வேண்டுமானால் கீழ்த்தரமான எண்ணங்கள் செயல்களை நீ கட்டாயமாகக் கைவிடவேண்டும். மறுபுறத்தில் சுயமான பாதையை உருவாக்கிக் கொள்ளுங்கள். தனித்த பண்போடு பயணிக்க முயன்றிடுங்கள். சொந்தக் கருத்துக்களை பேசுங்கள். உனக்கென்று தனியொரு சிறப்பான உலகமே உருவாகிடும் என்பதனை மறவாதே இளைஞனே! ஆகவே தான் இளைஞர்களே நீங்கள் நீங்களாகவே வாழ வேண்டுமானால் மாற்றம் தேவைப்பாடானது அம்மாற்றமானது சாதகமான மாற்றமாக உருவாக்கம் பெறவேண்டும்.

**மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று கவலைப்படாதே அது தாழ்வு மனப்பாங்கை உருவாக்கிவிடும்**

**நம்பிக்கையும் கடின உழைப்புமே தோல்வியை வெல்லும் மருந்து.**

**நீ உனது சொந்தக் காலில் நில்!!!!!!!!!!**

**(நிற்க வேண்டும்!!!!! )**




கோடு போட்டு வாழ முயன்றிடு இளைஞனே! இலக்கற்ற வாழ்க்கை உன்னையும் சிதைத்துவிடும் உன்னைச் சார்ந்தோரையும் சிதைத்துவிடும்.

இளைஞனே!

நீ தங்கி வாழ்பவனாக இருக்கப் போகின்றாயா? - இல்லை
உன்னில் பலர் தங்கி வாழ்வதற்கான நிலையை நீ அடையப் போகின்றாயா?
அனைத்தும் உங்களிடம் இளைஞர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய அரசியலும் கொள்கைப் பற்றும்

[பொறியான்]



கிழக்கு மாகாணத்தில் தேர்தல்கள் நடைபெறுவது தொடர்பான செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் பலகட்சிகளும் தமது வேட்பாளர்களைக் களமிறக்கும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளன. அதேவேளை அக்கட்சிகளுக்குள் தம்மை செலுத்திக்கொள்ளப் பலர் முயற்சித்துக்கொண்டிருப்பதும் நிகழ்கின்றது. விசேடமாகத் தமிழ் கட்சிகளுக்குள் தம்மைப் புகுத்திக்கொள்ள முயற்சிக்கும் பலர் தம்மை "வெள்ளையடிப்பதை" தமது ஆதரவாளர்கள் ஊடாகவும், சுயமாகவும் முனைப்புடன் முன்னெடுத்துவருவதை சமூக வலைத்தளங்களின் ஊடாக அறியக் கிடைக்கின்றது.

இவ்வெள்ளையடிப்பு முயற்சியானது இரண்டு வகைகளில் நிகழ்கின்றது.

முதலாவது தற்போது கிழக்கு மாகாண சபையில் அங்கத்தவர்களாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கையாலாகதவர்களாகவும், இலஞ்சப் பேர்வழிகளாகவும், சுயநலவாதிகளாகவும் சித்தரிப்பதன் ஊடாக புதியதொருவரைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற மனநிலையை ஏற்படுத்துவது.

இரண்டாவதாக தன்னை முன்னிலைப்படுத்தும் ஒருவர் தானே அல்லது தனது சில சகபாடிகள் ஊடாக தன்னையொரு ஆளுமை மிக்கவராகவும் (கையாலாகதவர் அல்ல), இலஞ்சத்தைக் கிஞ்சித்தும் எண்ணிப் பார்க்காதவராகவும் (இலஞ்சத்துடன் சம்பந்தமே படாதவர்) பொதுநலமுடைவராகவும் (சுயநலமற்றவர்) வெளிக்காட்டுவது.

இவையிரண்டின் ஊடாகவும் தம்மைச் சிறந்ததொரு தெரிவாக தமிழ்க்கட்சிகளிடையே முன்நிறுத்தும் முயற்சிகள் தொடங்கியுள்ளன.

இங்குதான் தமிழ்த் தேசிய அரசியலானது சாதாரண அரசியலில் இருந்து வேறுபட்டு நிற்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டிய தேவை எழுகின்றது.

தமிழ்த் தேசிய அரசியலானது அதனது கொள்கை அடித்தளத்திலிருந்து முன்னெடுக்கபட வேண்டுமேயொழிய இலங்கையில் உள்ள மற்றைய தேசிய இனமான சிங்கள இனத்தினதும், சிறுபான்மையினமான முஸ்லிம் இனத்தினதும் நலன்நோக்கிய அரசியற் செயற்பாடுகளைப் போல முன்னெடுக்கப்பட முடியாததாகின்றது.

தமிழ்த் தேசிய அரசியலானது, விடுதலை என்ற தொலைநோக்குடன் சுயநிர்ணயம் உறுதிப்படுத்தப்பட்ட தமிழ்த்தேசமான இணைக்கப்பட்ட வடக்குக்கிழக்கில் சமஸ்டி என்ற பணிக்கூற்றுடன் அரசியற் கொள்கைகளை வகுத்துச் செயற்படுவதும், இந்நகர்விற்கான இலக்குகளாக அடைய நினைப்பவற்றைத் தமிழ் மக்களின் வாக்குகளின் ஊடாகத் தமக்களிக்கப்படும் பதவிகளைக் கொண்டு அடைவதும்தான் சாதாரண அரசியலில் இருந்து தமிழ்த் தேசிய அரசியலை வேறுபடுத்திக் காட்டிநிற்கின்றது.

இவ்வடிப்படைத்தத்துவத்தைப் புரிந்து கொள்ளாதவர்களைத் தமிழர்கள் தமது அரசியற் பிரதிநிதிகளாகத் தேர்வுசெய்திருப்பதாலேயே இன்று விடுதலை நோக்கிய தமிழ் அரசியலானது அவ்வரசியல் எங்கு ஆரம்பித்ததோ அப் புள்ளியை நோக்கித் திருப்பிச் செல்வதைக் காண முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான கொள்கைப்பற்றற்றவர்களைத் தமிழ் மக்கள் தேர்வு செய்துவிட்டு, தேர்வானவர்கள் வாகன அனுமதிப்பத்திரத்திற்கும், சொகுசு வாழ்விற்கும் அடிபணிந்து போய்விட்டனரே என்று அங்கலாய்ப்பதில் எவ்வித நன்மையும் இல்லை.

அவ்வாறு அடிபணிந்து போனவர்களைத் தவிர்க்க வேண்டும் என தம்மை மக்களிடையே வெள்ளையடிப்பவர்களும் எதிர்காலத்தில் அடிபணிந்து போய்விடும் வாய்ப்பே உள்ளது. ஏனெனில் இவர்களிடமும் கூட விடுதலை நோக்கிய தமிழ்த் தேசிய அரசியற் கொள்கைப்பற்று இல்லாமலிருப்பதே அதற்குக் காரணமாகும்.

எனவே இனியாவது தமிழ்த் தேசிய அரசியற் கொள்கைப் பற்றை கடந்த காலங்களில் வெளிப்படுத்தி, அக்கொள்கைக்கு முற்றுமுழுதாகத் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டவர்களை மக்கள் அடையாளம் காணவேண்டிய தேவை குறிப்பாகக் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எழுந்துள்ளது.

தமிழ்த் தேசிய அரசியற் கொள்கைப்பற்று மட்டுமே தமிழ் மக்களுக்கு ஒரு நிம்மதியான தீர்வைப் பெற்றுத்தரும் என்பதை சிங்கள பேரினவாத அரசு மீண்டும் நிரூபித்திருக்கின்றது. அதனை நல்லாட்சி சனாதிபதியின் தேர்தலையும் அதனை நம்பித் தமிழ் மக்கள் வாக்களித்துவிட்டு அனைத்துத் தமிழ் மாவட்டங்களிலும் வாக்களித்த தமிழ் மக்கள் நிலத்திற்காகவும், சுடுகலச் சூட்டினால் மரணிப்பதற்கு எதிராகவும், காணாமலாக்கப் பட்டவரின் உண்மை நிலையைக் கண்டுகொள்வதற்காகவும், பொருத்து வீடுகளுக்கு எதிராகவும் தெருவில் நின்று போராடி வருவதன் ஊடாகவும் விளங்கிக் கொள்ள முடியும்.

கிழக்கு மாகாணத் தேர்தலில் ஆட்சியமைக்கப் போதியளவு பலமுடன் இருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது ஏன் சோரமிழந்து போனது என்பது இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளது.

இக்கணத்தில் அப்போதைய திருமலை ஆயரினை நடுநிலையாகக் கொண்டு அம்பாறையின் சிங்கள அரசியல் தலைவரொருவர் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளை கலந்து பேசிய போது நான்கு அமைச்சர் பதவிகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வழங்கத் தயாராக இருப்பதாகவும் தனக்கு முதலமைச்சுப் பதவியை வழங்குமாறும் கோரியிருந்தார். அத்துடன் தான் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியவுடன் அம்முதலமைச்சுப் பதவியையும் த.தே.கூ இடமே வழங்கிவிட்டு தான் பணிக்கும் ஒருவருக்கு ஒரு அமைச்சுப் பதவியை வழங்குமாறும் கேட்டிருந்தார். சிங்களக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து அரசமைக்கக் கூடாது என்று கருதியதாலேயே இவ்வாய்ப்பைத் தவறவிட்டதாகப் பேசசடிபடுகின்றது. அவ்வாறாயின் இன்று தேசிய அரசியலில் யாருடைய பலத்தில் கூட்டுச் சேர்வில் நல்லாட்சி அரசு நிலைத்து நிற்கின்றது?

கிழக்கில் அவ்வாறானதொரு வாய்ப்பிருந்த போதும் அதனை நிராகரித்துவிட்டு இன்று கிழக்கு மாகாணசபையில் ஆட்சியமைத்திருக்கும் கூட்டினால் கிழக்குத் தமிழர்கள் அனுபவிப்பது என்ன? என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

தமிழ்த் தேசிய அரசியலின் செல்நெறியானது தொலைநோக்கற்றிருப்பதையே மேற் சொன்ன செயலானது அப்பட்டமாக வெளிப்படுத்தி இருக்கின்றது. இந்நிலையில் மீண்டும் தொலைநோக்கற்றவர்களைத் தேர்வு செய்வதா? என்பதை மக்கள் சிந்திக்கக்கடமைப்பட்டுள்ளனர்.

எனவே "நாங்கள் தேர்வு செய்யப்பட்டால் மக்களுக்குப் பணி செய்வோம்" என்ற போலித் தேசியவாதிகளை இனங்கண்டு மக்கள் தமது தேர்வில் அவர்களை ஒதுக்கி விடவேண்டும் என்பதே கிழக்கைக் காக்கும் தமிழ்த் தேசிய அரசியலின் வெற்றிக்கு இன்று இன்றியமையாததாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி... உனக்குத்தான்!

தெல்மா சடகோபன்





அழிந்து போகின்ற உடலை வளர்த்து ஊட்டம் பெறச்செய்வதற்காக சத்தும், சுவையுமுள்ள உணவு தேடி அயராது உழைக்கின்றோம். உடலை அழகுபடுத்துவதற்காக வித விதமான ஆடைகளை அதிக விலை கொடுத்து வாங்குகின்றோம். இறந்த பிறகு ஆறடி நிலம் கூட நமக்குச் சொந்தமில்லை எனத் தெரிந்திருந்தும் அடுத்தவருடைய அரையடி நிலத்தை-யேனும் அபகரித்து நமது எல்லையை விஸ்தீரணப் படுத்திக்கொள்ள அதீத பிரயத்தனம் பண்ணுகின்றோம். ஆனால் அழிவில்லாத ஆன்மாவை சுவீகரித்துக்கொள்ள ஏதாவது செய்கின்றோமா? ஒளி நல்லது எனத் தெரிகிறது ஆனால் கண்களை திறக்க முடியவில்லையே.

'மண்ணின்று வந்த உடல் மண்ணிற்கே திரும்பு முன்னும் கடவுள் தந்த உயிர் அவரிடமே திரும்பு முன்னும் உன்னைப் படைத்தவரை நினை' எனச் சபை உரையாளர் (ச.உ 12:7) சொல்கின்றார்.

யாருமே கெட்ட வழியில் செல்லவோ, கெட்டவர்களாகவோ விரும்புவதில்லை. நல்லவர்களாகவே இருக்க விரும்புகின்றோம். ஆனால் ஏனோ முடிவதில்லை இரக்கச் செயல்கள் செய்ய ஆசைப்படுகின்றோம். ஆனால் தாராள மனம் தான் எமக்கில்லை. இறை கட்டளைகளைத் திரிபுற கற்றுக்கொள்கின்றோம். ஆனால் அதற்கு செயல்வடிவம் கொடுக்க ஞானம் எமக்கில்லை. ஏனெனில் பவுல் அடிகளார் சொல்வதைப்போல "நான் செய்வது என்னவென்று எனக்கே தெரிவதில்லை. எதை வெறுக்கிறேனோ அதையை செய்கின்றேன்." (உரோ 7:15)

காரணம் என்னவெனில், ஒரு மரக்கட்டையானது அடித்து செல்லப்படும் வெள்ளத்தின் போக்கில் செல்வது போல இவ்வுலகில் நாமும் ஒரு மரக்கட்டையாகவே வாழ்க்கைப் புயலில் எங்கோ போய்க்கொண்டிருக்கின்றோம்.

ஒரு பயணம் மேற்கொள்ள முடிவெடுக்கின்ற நாம் எங்கு போகின்றோம்? எதற்குப் போகின்றோம்? எந்த வாகனத்தில் பயணிக்க விருக்கின்றோம்? என அதற்கான ஒழுங்குகளை நேர்த்தியாக வரையறுக்க முடிந்த எம்மால் ஏன் வாழ்க்கை எனும் பயணத்தை நெறிப்படுத்த முடியவில்லை? ஏனெனில், அதற்கான முயற்சியை நாம் ஏறெடுப்பதில்லை என்பது தான் உண்மை. வாழ்க்கையைப் பற்றி திரு அப்துல் கலாம் மிக அழகாக கூறியிருக்கின்றார்.

வாழ்க்கை என்பது,
ஒரு சந்தர்ப்பம் - நழுவ விடாதீர்கள்.
ஒரு கடமை - நிறைவேற்றுங்கள்.
ஒரு இலட்சியம் - சாதியுங்கள்.
ஒரு சோகம் - தாங்கிக்கொள்ளுங்கள்
ஒரு போராட்டம் - வென்று காட்டுங்கள்.
ஒரு பயணம் - நடத்தி முடியுங்கள்.

ஆம்! அறுசுவை உணவு போல இன்பம், துன்பம், பிறப்பு, இறப்பு, வெற்றி, தோல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் கலந்த கலவையே வாழ்க்கை. இதைப்புரிந்து கொள்பவன் எல்லா விதமான சவால்களுக்கும் முகம் கொடுத்து சாதனை படைக்கின்றான். மற்றையவரோ நம்பிக்கையின்மையை உள்ளத்தில் சுமந்து முயற்சி எனும் துடுப்பை இழந்து வேதனைப்பட்டே மடிந்து விடுகின்றான்.

நாம் அடுத்தவர்களைப்பற்றி ஏராளமாக அறிந்து வைத்திருக்கின்றோம். சந்தர்ப்பம் கிடைத்தால் தாராளமாக விமர்சிக்க எம்மால் முடியும். ஆனால்...

எம்மைப்பற்றி சுய ஆய்வு செய்து பார்க்க தவறி விடுகின்றோம். உதிர்ந்து போன நாட்களில் நாம் என்ன செய்து விட்டோம்? எதைச் சாதித்தோம்? எத்தனை பேருக்கு நன்மை செய்து விட்டோம்? எத்தனை பேரை காயப்படுத்தியிருக்கின்றோம்? எத்தனை விதமான பாவங்களுக்கு சொந்தமாகி விடுகின்றோம்? சிந்திக்கின்றோமா?

தீமையா? நான் எந்தத் தீமையுமே செய்ததில்லை என நீங்கள் சொல்வீர்களேயானால் உங்கள் உள்ளத்தில் உண்மைக்கு இடமில்லை என்றாகிவிடும். ஏனெனில் ஒருவருடைய சாதுரியத்தால் அவருக்கு கிடைத்த உயர்வு, உங்களுக்கு அயர்வை தந்ததில்லையா? அவர்களை பாராட்டும் குணம் உங்கள் உள்ளத்துள் முகமூடி போட்டுக்கொண்டு ஒளிந்து கொண்டதில்லையா? நோயால் பீடித்திருக்கும் அயலவர்க்கு ஆறுதல் கூறமுடியாமல் வார்த்தை பஞ்சம் ஏற்பட்டதில்லையா? ஒருவருடைய துன்பத்தில் கூட திருப்தியடைந்து விட்டு, அவர்கள் முன்னால் பரிதாபப்படுவதாக பாசாங்கு செய்ததில்லையா?

உனது நண்பனின் ஏழ்மை தெரிந்திருந்தும் அவனுக்கு உதவ மனமின்றி, மெத்தனமாய் பகட்டாய் வாழ்ந்ததில்லையா? இப்படி எத்தனை நிகழ்வுகள் தான் நம் வாழ்க்கையில் இவையனைத்துமே பாவத்திற்கேதுவான தீமைகள் என்பதை ஏனொ உணர மறுக்கின்றோம்.

**சகோதரர்களே "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள். எனவே, உங்கள் இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மை மிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி" (1பேதரு 2:9) எனும் இறைவாக்கை உணர்ந்தவர்களாக ஆன்மாவை எதிர்த்துப் போர் புரியும் ஊனியல்பின் இச்சைகளை விட்டு விலகும் முகமாக, ஆசை, ஆர்வம், வேகம், விவேகம், முயற்சி ஆகிய அனைத்தும் கலந்த துடுப்பைக் கையாண்டு ஒளியை நோக்கிப் பயணிக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவைத் தேடடா



அன்பு காட்டியே ! பெரும்
அறிவைத் தேடடா !
இன்பச் செல்வமே ! குறள்
ஏடும் உனதடா !

பழைய புலவர்தம் – தமிழ்ப்
பாவைப் பாரடா !
இளைய அறிவியல் – தன்னையும்
ஏற்றுக் கொள்ளடா !

அவையில் முன்னணி – இருக்கை
அமர்ந்து கொள்ளடா !
எவர் வினாவினும் – விடையை
இயம்பிப் போடடா !

அறிவின் உச்சியில் – நீ
அமர வேண்டுமாம் !
அறிஞன் என்றுனை ! தமிழர்
அழைக்க வேண்டுமாம்



தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு - கிண்ணியா)

## புதுயுகம் படைத்திடுவாய்



நேற்றைய சிறுவனாய் நீ !
இன்றைய இளைஞனா நீ !
நாளைய தலைவனா நீ !
நாட்டை நடத்தி நல் வழிகாட்டுவாய் நீ !

அரிது இந்த பிறவு உனக்கு அறிந்திடுவாய் நீ
ஆற்றல் மிகுந்த மனிதனாய் ஆகிடுவாய் நீ
அறிவியலை வளர்த்துலகில்
அறிஞராக சான்றோராக ஆகிடுவாய் நீ

சத்தியத்தை இலட்சியமாய் கொண்டிடுவாய்–நீ
சமாதானமான பாதையை வகுத்திடுவாய் நீ
சாதனைகள் பலபுரிந்து
சரித்திரம் படைத்திடுவாய் நீ

கணனி கற்று கவிதை பாடிடுவாய் –நீ
கற்பனையில் மூழ்கி நல்ல
கதைகளும் புனைந்திடுவாய் – நீ
பூவுலகம் புகழ்தேற்ற
புதுமைகளும் கண்டு நீ
புதுயுகம் படைத்திடுவாய்



திருமதி. றிறிஜஸ் சுரேந்திரா
(ஓய்வு பெற்ற ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தில் இளைஞரின் பங்கு



இளமையில் இன்பமே இனியது
பருவத்தில் அதுவே பரந்தெங்கும் பாய்வது
திறமையை திரட்டி திக்கெட்டும் செல்வது
தேனினும் இனிய இளமையே இளமை

திருமதி. பிரிஜட் சுரேந்திரா

ஆம் இளமைப்பருவமே மனித வாழ்க்கையின் சீரிய சிறப்பு வாய்ந்த பருவமாகும். அழகு வாய்ந்த பருவம் களங்கமற்ற பருவம் வாழ்க்கை எனும் நகரிலுள்ள மாண்புமிகு பூஞ்சோலை. எதிர்கால சமுதாயத்தை நிலைபெறச்செய்யும் பருவம்.

“எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே” என்ற கவிஞரின் பாடலுக்கமைய ஒரு குழந்தை பிறக்கின்ற போதே நல்லவனாகவே மாசுமறுவற்ற மனம் படைத்தவனாகவே பிறக்கின்றான். அவன் வளரும் போது பலவித வடிவங்களிலே வளர்ச்சி பெற்று நல்லவனாகின்றான். அறிஞனாகின்றான் விஞ்ஞானியாகின்றான் ஏன் நாட்டின் தலைவனாகவும் மிளிர்கின்றான். இன்னும் சிலர் தீவிரவாதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் பாதகச்செயல்களை புரிபவராகவும் சமுதாயத்தை சீரழிக்கின்றனர். காரணம் வளரும் பருவத்தில் சிறந்த கல்வியும் வழிகாட்டலும் நல்லொழுக்கமும் வறுமையுமே காரணமாகும். இன்றைய சூழலில் இளைஞர்கள் பலர் பல்வேறு தாக்கங்களுக்குள்ளாகின்றனர். அரசியல் குழறுபடிகள் படித்தும் வேலைவாய்ப்பின்மை தகுந்த தலைமைத்துவமின்மை என்பவற்றால் விரக்தியின் விளிம்புகளில் தள்ளப்பட்டு தடுமாறி வாழ்க்கையை அழித்துவிடுகின்றனர். எனினும் வேதனைகளை சாதனையாக மாற்றி சரித்திரம் படைத்த இளைஞர்கள் சிலரையும் சமுதாயத்தில் காணமுடிகின்றது.

இளைஞர்கள் இளமையிலேயே இலட்சிய நோக்குடன் வளர்வார்களேயானால் எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக உருவாக முடியும். இளைஞர்களை பொறுத்தவரையில் அவர்கள் கல்விகற்கும் காலத்திலேயே தலைமைத்துவ பண்பை கற்றுக் கொள்கின்றனர். மாணவ மன்றங்கள் விளையாட்டுப்போட்டிகள் சாரண இயக்கம் சென்ஜோன் அம்புலன்ஸ்சங்கம் செஞ்சிலுவை சங்கம் போன்ற சமூகஇயக்கங்களில் பங்குகொள்வதன் மூலமும் நல்ல பண்புகளை வளர்த்துக்கொள்கின்றனர். இளமைக்காலத்தில் கொண்ட இலட்சிய வேட்கையை இறுதியில் உலகம் போற்றும் தலைவர்களாக உருவாக்கியுள்ளமையை நாம் அறிவோம். மகாத்மா காந்தி, ஆபிரகாம் லிங்கன், வின்சன் சேர்ச்சில் நெப்போலியன் போன்றோர் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

எனவே இளைஞர்கள் குணத்தில் உயர்வாக கொள்கையில் குறியாக முயற்சியில் முதல்வனாக செயற்பட்டு வாழ்க்கையை ஒளிமயமாக்கி மற்றவர்களையும் வாழவைக்கவேண்டும். மாறாக இன்றைய நடைமுறை சூழலில் சிக்குண்டு கண்டதே காட்சி கொண்டதே கோலம் என கருதி தம்மையும் அழித்து சமூதாயத்தையும் அழிக்க முற்படுவதனால் மனிதனாக பிறந்ததில் என்ன பயன்? நல்லவற்றை செய்து நற்பெயரை வாங்கி நாடு போற்ற உத்தமனாய் வாழ்வதே இளைஞர்களின் கடமையும் பொறுப்புமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீடப் பணியாளர்களுக்கான பயிற்சி



திருகோணமலை மறை மாவட்ட பீடப் பணியாளர்களுக்கான பயிற்சி கடந்த 2017.06.10ம் திகதி திருகோணமலை புனித மரியாள் பேராலய மண்டபத்தில் காலை 8.45 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெற்றது. இப் பயிற்சியில் 52 பீடப் பணியாளர்கள் பங்குபற்றினர். அருட்பணி றொஹான் பேர்ணாட் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப் பயிற்சியில் எமது ஆயர் மேதகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்களும் கலந்து கொண்டு பீடப் பணியாளர்களின் பணிகளின் முக்கியத்துவம் பற்றி விளக்கனார். இப் பயிற்சியானது சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் ஒரே சமயத்தில் இடம் பெற்றது.

## கத்தோலிக்க இளைஞர் யுவதிகளுக்கான வருடாந்த தியானம்.





மேற்படி தியானமானது மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இயக்குனர் அருட்பணி றொஹான் பேர்ணாட் அவர்களின் வழி நடத்தலின் கீழ் இளைஞர்களுக்கான தியானம் கடந்த 2017.06.02ம் திகதி இறையிரக்க திருத்தலத்தில் நடைபெற்றது. யுவதிகளுக்கான தியானம் கடந்த 2017.06.04ம் திகதி நடைபெற்றது. அருட்பணி போல் றொபின்சன், அருட் சகோதரர் கிறிஸ்துதாஸ் ஆகியோர் தியானத்தை வழி நடாத்தினர்.

மொத்தமாக 104 இளையோர் கலந்து கொண்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரம் : AsiaNews / வத்திக்கான் வானொலி

1. இம்மாதம் 30ம் தேதி முதல், ஆகஸ்ட் 6ம் தேதி வரை, இந்தோனேசியாவின் யோகார்த்தாவில் நடைபெறவிருக்கும் 7வது ஆசிய இளையோர் தினத்தில்

ஆசியாவின் பல்வேறு நாடுகளிலிருந்து, ஆயிரக்கணக்கான இளையோர், தங்களின் ஆன்ம வழிகாட்டிகள் மற்றும் ஆயர்களுடன், இதில் கலந்துகொள்ளவுள்ளனர். மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை, ஆசிய இளையோர் நாள் சிறப்பிக்கப்படுகின்றது.

JOYFUL ASIAN YOUTH!
LIVING THE GOSPEL IN MULTICULTURAL ASIA



2. 2016ம் ஆண்டு மார்ச் 4ம் தேதி, ஏமன் நாட்டின் ஏடென் நகரில், அன்னை தெரேசா பிறரன்பு சகோதரிகள் நடத்தி வந்த முதியோர் இல்லத்தில் நுழைந்த தீவிரவாதிகள், 4 அருள்சகோதரிகள் உட்பட 16 பேரை கொலை செய்துவிட்டு, அவ்வில்லத்தில் ஆன்மீக வழிகாட்டியாகப் பணியாற்றிய அருள்பணி டாம் உழுன்னலில் அவர்களை பிணைக்கைதியாகக் கடத்திச் சென்றனர்.

கடத்திச் செல்லப்பட்ட அருள்பணியாளர் டாம் உழுன்னலில் அவர்கள், இன்னும் உயிருடன் இருக்கிறார் என்றும், அவரை விடுவிக்க ஏமன் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்றும், அந்நாட்டு துணைப்பிரதமர் கூறியுள்ளார்.

3. அருள்பணியாளர் பயிற்சியை மையப்படுத்தி அண்மையில் உரோம் நகரில் நடைபெற்ற கருத்தரங்கின் துவக்கத் திருப்பலியில், அருள்பணியாளர் பேராயத்தின் தலைவரான கர்தினால் பென்யமினோ ஸ்டெல்லா அவர்கள் மறையுரையாற்றுகையில் அருள்பணியாளர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருப்போர், அவர்களுக்கு, தந்தையாக, தாயாக, உடன்பிறந்தோராக இருந்து, அவ்விளையோரை வழி நடத்த அழைக்கப்பட்டுள்ளனர் என்று கூறினார்.





4. 2019ம் ஆண்டு சனவரி 22ம் தேதி முதல், 27ம் தேதி முடிய பானமா நாட்டில் நடைபெறவிருக்கும் உலக இளையோர் நாள் நிகழ்வுகளுக்கு ஒரு தயாரிப்பாக, இவ்வாண்டு ஆகஸ்ட் 20ம் தேதி, உலக இளையோர் நாள் சிலுவையும், மரியன்னையின் உருவப்படமும், மெக்சிகோ நாட்டில் தன் பயணத்தைக் துவக்கும் என்று பனாமா ஆயர்கள் கூறியுள்ளனர்.

உலக இளையோர் நாளுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட மையக் கருத்தான, "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக்கா 1:38) என்ற சொற்களின் அடிப்படையில், இந்த உலக நிகழ்வுக்கு உரிய பாடல் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டது என்று வத்திக்கான் செய்தி மேலும் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியலில் புதிய கண்ணோட்டத்திற்கான ஆழ அகலக் கருத்தரங்கு

திருகோணமலை மறை மாவட்ட ஆயர் மேதகு. கலாநிதி. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் ஏற்பாட்டிலும் பொது நிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி றோஹான் பேர்னாட் அவர்களின் அனுசரணையின் பேரிலும் பின்வருவோர் இந்தியா, பெங்களூர் தேசிய மறைக் கல்வி நடு நிலையத்திற்கு கடந்த 2017.05.26 திகதி பயணமானார்கள்.

1) திரு.கி. கிறிஸ்டி முருகுப் பிள்ளை - இணை ஆசிரியர் - அலை ஓசை

2) திரு.எஸ். பாக்கியநாதன் - செல்வநாயகபுரப் பங்கு

3) செல்வி. ஆன். றொஸ்ரினா - பேராலயப் பங்கு

4) செல்வி. ஐ. ஜெபமணி - சாம்பல் தீவுப் பங்கு

2017.05.27 அன்று ஆரம்பமான இக் கருத்தரங்கு 2017.06.02 திகதி முடிவடைந்தது. அருட்பணி. லூயிஸ் அடிகளார் அருட்பணி. எக்ஸ்.டீ. செல்வராஜ் ஆகியோரின் நெறிப்படுத்தலிலும் திரு.பொன்.லோரன்ஸ், கலாநிதி ஜோன் பொஸ்கோ, திரு.மரிய மிக்கேல், திரு.ஈ. ஆரோக்கியராஜ், கலாநிதி பேர்ணத்தம்மா, திரு.ஜோன் ஜோசப் ஆகியோரின் வழிகாட்டலிலும் சிறப்பாக நடைபெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சபை வரலாற்றில் 2ம் லத்திக்கான் சங்கத்திற்கு முற்பட்ட கால அமைப்பும், செயற்பாடுகளும் 2ம் லத்திக்கான் சங்கத்தின் பின்னால் எவ்வாறு மாற்ற மேற்பட்டது, புத்துணர்ச்சி ஏற்பட்டது பற்றியும் பொது நிலையினரின் பணி எவ்வாறு முக்கியத்துவப்படுத்தப்பட்டது. தற்போதும் எதிர் காலத்திலும் எமது பார்வையும் மதிப்பீடுகளும் எவ்வாறு இறை அனுபவத்தோடு அமைய வேண்டும் என ஆழமாக ஆராயப்பட்டது.

தொடர்ந்து வேளாங்கண்ணி அன்னை ஆலயம், புனித தோமையார் பேராலயம், புனித தோமையார் சிறிய மலை, புனித தோமையார் பெரிய மலை ஆலயம், பெங்களூரு குழந்தை யேசு ஆலயம், ஆரோக்கிய அன்னை ஆலயம், சட்ட சபை மற்றும் பிரசித்தி பெற்ற தலங்களை தரிசிக்கும் வாய்ப்பும் இவர்களுக்கு கிட்டியது.

உங்கள் வாலிபப் பிள்ளைகளையும் குடும்ப வரவு செலவு திட்டத்தை போடும் போது வைத்துக்கொள்ளுங்கள். அப்போதுதான் ஒவ்வொரு ரூபாவையும் உனக்கு பெற்றோர்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள் என்பது புரியும்.

சேமிக்கும் பழக்கத்தைச் சிறுவயதிலிருந்தே பழக்குங்கள். அச்சேமிப்பிலிருந்து தன் உடன் பிறந்தோருக்கு அன்பளிப்பு வாங்கி கொடுக்கச்சொல்லுங்கள். அதனால் பகிர்ந்து கொள்ளல் விட்டுக்கொடுத்தல் போன்ற நல்ல பண்புகள் உருவாகும்.


பிள்ளைகள் வளர வளர பிறந்த நாளை ஆடம்பரமாக கொண்டாடாதீர்கள். ஆதரவற்ற குழந்தைகளை அழைத்து அவர்களுடன் உங்கள் பிள்ளைகளின் பிறந்தநாளை கொண்டாடுங்கள். அப்போதுதான் தாம் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள் என்பதும் பெற்றோர்களுடைய அருமையும் அவர்களுக்கு புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விமர்சனம்

# செங்கதிரோனின் விளைச்சல்




'விளைச்சல்' என்னும் குறுங்காவியத்தை செங்கதிரோன் (கோபால கிருஷ்ணன்) யாத்து இலக்கிய உலகுக்குப் படைத்துள்ளார். அந்நூல் பற்றி ஒரு கண்ணோட்டம்.

இன்று தமிழ் இலக்கிய உலகில் கவிதைகள் தான் ஏராளமாக சஞ்சரிக்கின்றன. கவிஞர்களே பெரிதும் உலா வருகின்றனர். தற்செயலாக யார் மீதாவது முட்டிக்கொண்டு தடுமாறி நிமிர்ந்து பார்த்தால் அவர் ஒரு கவிஞராக இருப்பார். நம் நாட்டு நிலைமை இப்போது இப்படி இருக்கிறது. "எழுத்தாளர் கவிஞர் என்று பேரெடுத்தால் காணும் - பேரும் புகழும் சமூக அந்தஸ்த்தும் கிடைத்துவிடும்" என்று இயங்குவது போலுள்ளது!....

புதுக்கவிதையாம் பின் நவீனத்துவமாம் என்று பல பேரும் பல கவிதைகளையும் சொரிந்து கொட்டிக் கொண்டே இருக்கிறார்கள். நாங்களும் படித்து சுவைக்க முடியாமல் விரக்தியுற்றிருக்கிறோம்! பழம் தமிழ் கவிதைகள் காவியங்களால் பெருமையுற்றது தமிழுலகு! இன்று பரிசிக்கும் நிலையே ஆனது! ..... நீட்டி எழுதினால் வசன நடை. அதையே வரிப்படுத்தி எழுதினால் கவிதை நடை என்ற நிலையே இன்றுள்ளது! சரி· என்னதான் சொல்கிறார்கள் என்று உருப்படியாய் ஏதும் விளங்க வேண்டாம்? அதுவும் இல்லை! கவி நயமோ ஓசை நயமோ கருத்துச்செறிவோ ஒன்றும் இல்லை! ஆனால் தங்களுக்கு தாங்களே கவிஞர் பட்டம் சூட்டிக்கொண்டு திரிகிறார்கள்! அம்மா தமிழ்த் தாயே, ஏனம்மா உன் புதல்வர்கள் உன்னை நிந்தை அவமானப் படுத்துகிறார்கள்!

இப்படி இருக்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய புலமை சார் புலவர்கள் நம் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள் ! அவர்கள் தமிழ் அன்னைக்கு மானம் காத்து பெருமை சேர்த்துக்கொண்டுதான் வருகிறார்கள்! அந்த வரிசையில் முன்னிலையில் நிற்பவன்தான் செங்கதிரோன்! விளைச்சல் குறுங்காவியத்தை படித்த போது அவ்வாறு தான் எண்ணத்தோன்றுகிறது! இவ்வளவு ஆற்றலை திறமையை இவ்வளவு காலமும் எங்கே மறைத்திருந்தார் என்றும் புரியாமல் இருக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழ் நாட்டுக்கு பெருமை சேர்த்த கவிஞன் நீலாவணன் முக்கியமானவன்! அவன் 'வேளாண்மை' என்றும் காவியத்தை முடிக்கும் முன்னே உயிர் நீத்தான்! அதை விளைச்சல் எனும் பெயரில் நிறைவாக்கி பெரும் நிறைவை கண்டிருக்கிறார் செங்கதிரோன்! நீலாவணனே உயிரோடிருந்தால் அதிசயித்திருப்பான் 'நானே எழுதி முடித்திருந்தாலும் இவ்வளவு சிறப்புற்றிருக்குமா?' என்று அவ்வளவு கன கச்சிதமாக அமைந்திருக்கிறது.

இக் காவியம் ... அறுசீர் விருத்தத்தில் இலக்கண முறைப்படி யாத்திருந்தாலும் நாட்டார் பாடல் இசையில்தான் கவி நடை செல்கிறது சொல் நயம் கவி நயம் பொருள் நயம், இலக்கிய நயம் ஓசை நயம் என்று எத்தனையோ நய நளினங்கள் இருந்து நம்மை எங்கோ தூக்கிச் செல்கிறது. முக்கியமாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கே உரித்தான கிராமங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற என்றும் வாழ வேண்டிய பல் கலைகளை பழக்கவழக்கங்களை அப்படியே எடுத்துக்காட்டி உயிரூட்டி மெருகூட்டி விட்டிருக்கிறார்

செங்கதிரோன், கதையம்சத்தை விட மட்டு நகர் மான்மியத்தின் பண்பாட்டுக் கோலங்களை எடுத்துக் காட்டுவதற்காகவே அதை வாழ்வாங்கு வாழ வைப்பதற்காகவே இக்காவியத்தை படைத்திருக்கிறார் என்றால் சந்தேகமில்லை.

கதை சாதாரணமானதுதான் அண்ணன் தங்கை குடும்பம் இரண்டிலும் பருவ வயது ஆணும் பெண்ணும் இருக்கிறார்கள். சமைந்ததில் (சாமத்தியம்) இருந்து பழைய பகையை மறந்து பூப்புனித நீராட்டு, கல்யாணப் பேச்சுவார்த்தை, கல்யாண சடங்கு, விருந்து வைபவம், முதலிரவு கருத்தரித்தல், அதன் அறிகுறிகள், பக்குவம் பார்க்கும் முறைகள், பிரசவம் மருத்துவிச்சி மருந்துகள், மூலிகைகள், பக்குவங்கள், பிள்ளைப் பேறு, சந்தோஷ ஆரவாரம், தலை வழிப்பு உடுப்பு கருவு என்று.... எல்லோர் வாழ்விலும் நிகழ்வதை கிராமிய பண்புக்கோல சுவையோடு சொல்லிப் போந்திருக்கிறார்!

ஆனால் கதையம்சம் உன்னதமான காவியமாக இது இல்லை! இது தான் இக் காவியத்தின் பலவீனம்! இனிவரும் காலங்களில் நல்ல கதையம்சம் உள்ள காவியங்களை இதே பாணியில் நாட்டார் ஓசையில் மட்டக்களப்பு பண்பாட்டோசையில் மிளிரச்செய்ய வேண்டும் என்பது எமது எதிர் பார்ப்பு! தமிழுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துகிறோம்!

இனி அவர் கவிதைத் தேன் துளிகளில் சிலதை தெளிக்கிறேன், படித்துச் சுவையுங்கள்..... தாயாருக்கு சமர்ப்பணமாக இவ்வாக்கத்தை துவங்குகிறார்...

அம்மா ஊனை மறந்து உலகத்தின் பற்றறுத்து மோனத்தவமியற்றும் முனிவர் போல பேச்சற்று படுத்துக்கிடந்தீர்கள் பக்கத்தில் வந்தமர்ந்து அம்மா... என்றழைத்து ஆரம்மா நான் என்று அடுத்தடுத்து கேட்டவுடன் 'தம்பி' என்று சத்தமிட்டுச் சொன்னீர்கள் சற்றும் நான் எதிர்பார்க்கவில்லையம்மா.....

**சந்தோசத்தில் கதை தொடங்குகின்றது......**



**சூசை எட்வேட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலுதவியும் அதன் அடிப்படை அம்சங்களும்...



சந்தான்பிள்ளை தேவசகாயம்
(முன்னாள் திருமலை மாவட்ட ஆணையாளர்-
புனித.ஜோன் அம்புலன்ஸ்)
நியூ யோர்க் - USA



*கடந்த இதழின் தொடர்ச்சி.. .. ..*

உதாரணமாக முழங்கைக்குக் கீழ்பகுதியில் முறிவு ஏற்பட்டிருக்குமாயின் நோயாளியின் மற்றைய கையால் தாங்கிப்பிடிக்கலாம். அல்லது அருகில் கிடைக்கக் கூடிய மட்டை, துணி போன்றவற்றைப் பயன்படுத்தலாம். இவ்வாறு முதலுதவியினைச் செய்து கொண்டு விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும். ஒரு முதலுதவியாளரின் பணியானது குறித்த நோயாளியை அல்லது பாதிக்கப்பட்டவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று வைத்தியரிடம் ஒப்படைத்ததுடன் நிறைவடைகின்றது.

முதலுதவி ஏன் செய்யப்பட வேண்டும் என்ற வினா எழுவது இயல்பானதே. குறிப்பாக முக்கிய மூன்று நோக்கத்தினை முன்வைத்தே முதலுதவிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்டவரின் அல்லது நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவது முதலாவது நோக்கம். இரண்டாவது நோக்கம், நிலைமை மேலும் மோசமடைவதை கட்டுப்படுத்துவதாகும். உதாரணமாக குருதிப் பெருக்கு ஏற்பட்டிருக்கும் நோயாளியின் குருதிப் பெருக்கினை நேரடி அமுக்கம் கொடுத்து அல்லது உரிய முறையில் பந்தணத்தை பயன்படுத்தி, கட்டுப்படுத்தி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் போது குருதிப் பெருக்கினால் ஏற்படக்கூடிய உயிர் ஆபத்தினைக் கட்டுப்படுத்தலாம். மூன்றாவது நோக்கம், விரைவாகக் குணமடைவதற்கு உதவுதல், அதாவது கையிலோ அல்லது காலிலோ முறிவு ஏற்பட்டிருக்கும்போது உரிய முறையில் மற்றைய உறுப்புடன் சேர்த்துக் கட்டுவதன் மூலம் (முறிவு ஏற்பட்ட இடத்தில் மட்டையினை வைத்துக் கட்டி அதற்கான ஆதாரத்தினை கொடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது) நோயாளி வைத்தியசாலையில் குணமடைவதற்காக எடுக்கும் காலம் குறைவடையும்.

இவ்வாறு முதலுதவி வழங்கும் போது முதலுதவியாளர் தான் ஒரு வைத்தியர் என்று எண்ணாது சில பண்புகளைக் கொண்டவராக செயற்படுதலும் அவசியமாகும். குறிப்பாக அவதானம், சாமர்த்தியம், மூலசாதனம், மூளைத்திறன், தெளிவு, வேறுபடுத்தி உணர்தல், விடா முயற்சி, அனுதாபம் போன்ற பண்புகளைக் கொண்டவராகச் செயற்படுதல் அவசியமாகும்.

குறிப்பாக அவதானம் என்னும் போது விபத்து ஏற்பட்ட பின்புலத்தினையும், விபத்து ஏற்பட்ட சூழலையும், ஏற்படக்கூடிய மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட பாதிப்புக்களையும் முதலில் அவதானி-த்தல் வேண்டும்.

சாமர்த்தியம் என்னும் போது அவசியமற்ற கேள்விகளைக் கேட்காது நோயின் அறிகுறிக-ளையும், அதன் காரணிகளையும் அறிந்து கொண்டு நோயாளியினதும் அருகில் இருப்பவரினதும் நம்பிக்கைக்குப் பாத்திரவாளி-யாக வேண்டும்.

மூலசாதனம் என்பது மிகவும் சிரமமான நிலையிலும், சமாளிக்கத்தக்க, மேலும் ஆபத்து நேராவண்ணம் கையிற் கிடைக்கும் பொருட்-களைச் சாதுரியமாகவும், விரைவாகவும், உபயோகித்தல் வேண்டும்.

மூளைத்திறன் என்பது நோயாளிக்குத் தேவையற்ற வலியைக் கொடுக்காமலும், பிரயோகிக்கும் உபகரணங்களைச் சுத்தமாகவும், திறமையாகவும், விரைவாகவும் உபயோகித்தல் ஆகும். மேலும் தொடர்ந்து முதலுதவி பற்றிய அறிவை இற்றைப்படுத்திக் கொண்டிருத்தலும் அவசியம்.

மேலும், நோயாளிக்கோ அல்லது அவருடன் வந்தவருக்கோ அல்லது பக்கத்தில் நிற்பவருக்கோ என்ன செய்யவேண்டும் என்பதை தெளிவாகவும், விபரமாகவும் கூறுதல் ஒரு முதலுதவியாளர் கொண்டிருக்க வேண்டிய அம்சம் ஆகும்.

வேறுபடுத்தி உணர்தல் என்பது பாதிக்கப்பட்ட பல நோயாளிகள் இருக்கும் போது அதில் யாருக்கு முதலில் முதலுதவி செய்ய வேண்டும் என்பதை அறிதல் வேண்டும். குறிப்பாக காயப்பட்டு குருதிப்பெருக்கு உள்ள நபரை அல்லது, சுயநினைவு இழந்த நிலையில் உள்ளவர்களை இனங்கண்டு முன்னுரிமை-யளித்து முதலுதவி வழங்குதல் வேண்டும்.

முதலுதவியின் போது முதலில் தனது முயற்சி வெற்றியளிக்காவிடினும் மனச்சோர்வ-டையாது தனது முயற்சியைத் தொடர்ந்து திருப்திகரமான நிலைமை ஏற்படும்வரை முதலுதவி செய்தல் வேண்டும்.

அனுதாபம் நோயாளிக்கு மனச்சாந்தி-யையும், ஊக்கத்தையும், உண்மையான வசதியையும் கொடுக்க உதவும். இதுவே முதலுதவியின் மூலாதார சேவையாகும்.

முதலுதவியின் அடிப்படையான அம்சங்களை விளங்கிக் கொள்வதன் மூலம் ஒரு விபத்தின் போதோ அல்லது நோயின் போதோ பலரின் உயிரைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை தோன்றியிருக்கும் என எண்ணுகின்றேன்.

சந்தர்ப்பம் கிடைத்தால் விபரமாக தொடர்வேன்......



**அறிவிற்கினிய துணுக்குகள்**

"மனித முன்னேற்றத்திற்காகவும் மனித விடுதலைக்காகவும் நீதிக்காகப் போராடுவதுமே கிறிஸ்தவ வாழ்வாகும்"

"எவர் ஒருவர் தனக்குக் கீழ் குற்றேவல் செய்ய ஒருவர் இருக்கிறார் என்று சொல்கிறாரோ அவர் விடுதலை பெற்ற மனிதரல்ல"

"அறிவு ஆண்டவரைத் தேடலாம் ஆனால் அன்பினால் தான் அவரை காணமுடியும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலை ஓசை ஆறின் புதிர் போட்டி முடிவுகள்.

சித்திரை, வைகாசி, ஆனி 2017 அலை ஓசையில் வெளிவந்த அனைவருக்குமான புனித ஜோசப்வாஸ் அடிகளார் தொடர்பான புதிர்ப் போட்டி முடிவுகள். கிடைக்கப் பெற்ற விடைகளின் அடிப்படையில் சரியான விடை எழுதிய மாணவர்களில் இருந்து குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்ட முதல் மூன்று அதிஸ்டசாலிகளின் பெயர் விபரம்.

**முதலாம் பரிசு: செல்வன். சி.யதுஷன்**
(இருதயபுரப் பங்கு)

**இரண்டாம் பரிசு: செல்வி. ஜே.சர்மிஷா**
(இருதயபுரப் பங்கு)

**மூன்றாம் பரிசு: செல்வன்.ஜோ.அல்போன்ஸ் (இருதயபுரப் பங்கு)**

மேற்படி புதிர்ப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுப்பணமாக ரூ.300 உரிய பங்குத் தந்தையினூடாக அனுப்பி வைக்கப்படும். பங்கு பற்றியவர்களுக்கும், பரிசு பெற்றவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

**வாழ்த்துகிறோம்...**

அருட் சகோதரி எம். ஸ்ரனிஸ்லாஸ் மேரி(அ.கா) அவர்கள் தனது 60வது அர்ப்பண வாழ்வை நிறைவு செய்ததை முன்னிட்டு கடந்த 2017.06.16ம் திகதி பாராட்டு விழா நடைபெற்றது. இவரின் சேவையை நன்றியுடன் பாராட்டுவதோடு எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**– அலை ஓசை குடும்பம் –**



## ஆழ்ந்த இரங்கல்

திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் நீண்ட காலம் தனது அர்ப்பணிப்பான இறைபணியை ஆற்றி தனது 93வது வயதில் இறைவனடியில் இளைப்பாறுதலடைந்த
**அருட்தந்தை ஜே.எஸ்.அரசரெத்தினம் அடிகளாருக்கு**
அலை ஓசை தனது கண்ணீர் அஞ்சலியைப் பதிவு செய்கிறது.






## அலை ஓசையில் விளம்பரம் செய்ய....

தங்கள் வியாபார நிலையங்கள், திருமண வாழ்த்துக்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், ஞாபகார்த்த நினைவுகள் போன்ற எல்லா வகையான விளம்பரங்களையும் அலை ஓசையில் விளம்பரம் செய்யலாம்

| | | |
|---|---|---|
| பிற்பக்க முழுவண்ணப்படம் | ரூபா | 5000 |
| உட்பக்கம் (முழுப்பக்கம்) | ரூபா | 4000 |
| அரைப்பக்கம் | ரூபா | 2000 |
| காற்பக்கம் | ரூபா | 1000 |

தொடர்பு.
அலை ஓசை
17, அந்தோனியார் வீதி, திருகோணமலை
0776771119

*trincoalaiosai@gmail.com*
*A|C NO; 79003336 (BANK OF CEYLON)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் : ..............................................................

விலாசம் : ..............................................................

..............................................................

பங்கு : ..............................................................

தரம் –10 – பாடம் 16–21 வரை
தரம் – 11 – பாடம் 18–21 வரை

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

1. முதலாம் கட்டளையில் உள்ளடங்குகின்ற செபத்தில் நிறைவேற்றப்படுகின்ற 3 பண்புகளையும் எழுதுக?

   ..............................................................

2. "நீ பிறக்கு முன்பே உன்னைத் திருநிலைப் படுத்தினேன்" என்று ஆண்டவரால் எந்த இறைவாக்கினருக்குக் கூறப்பட்டது?

   ..............................................................

3. அனைவரும் எப்போது இறுதி தீர்ப்புக்கு உள்ளாக்கப் படுவோம்?

   ..............................................................

4. பயிரிடுதல், பாதுகாத்தல் என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொற்கள் எவை?

   பயிரிடுதல் .................................. பாதுகாத்தல் ..................................

5. சாவான பாவத்திற்குள்ளாகிய ஒருவர் உடனடியாக யாது செய்ய வேண்டும்?

   ..............................................................

6. சுத்த போசனம் அனுசரிக்க வேண்டிய 2 நாட்களைக் குறிப்பிடுக?

   ..............................................................

7. "நம்பிக்கையின் தந்தை" என அழைக்கப்படுமளவுக்கு ஆசீரைப் பெற்றுக் கொண்டவர் யார்?

   ..............................................................

8. "நீ மனிதரிடமல்ல, கடவுளிடமல்லவா பொய் சொன்னாய்" என்று யார், யாருக்கு கூறினார்?

   ..............................................................

9. வாக்குறுதி அளிக்கின்ற அருளடையாளங்கள் எவை?

   ..............................................................

10. தூய மரிய கொறற்றியைக் கத்தியால் குத்திக் கொலை செய்தவர் யார்?

   ..............................................................

தொகுப்பு : திருமதி. ஜெயவதனி மரியதாஸ்

இப்படிவத்திலேயே விடைகளை நிரப்பி அனுப்ப வேண்டிய இறுதித் திகதி - 2017.09.15
சரியான விடைகளில் இருந்து தெரிந்தெடுக்கப்படும் மூவருக்குத் தலா ரூ300 பரிசாக வழங்கி வைக்கப்படும்.

விடை அனுப்ப வேண்டிய முகவரி :


**ஆசிரியர், அலைஓசை**
**இல 17, புனித அந்தோனியார் வீதி, திருகோணமலை.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கிடைக்கப்பெற்றோம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிவண ஆயர் கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை

ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்ட ஈராண்டு நிறைவு நிகழ்வுகள்

25.07.2017



அருட்சகோதரிகளுடன் ஆயர்



அருட்தந்தையர்களுடன் ஆயர்



ITCAT அமைப்பினருடன் ஆயர்



ஆயரவர்களின் பணி சிறக்க அலை ஓசை கலைக்குடும்பம் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

ஆயரவர்களின் பணி நீடித்து சிறக்கப் பிரார்த்திப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org